
# வெள்ளிக்கிழமை நாள்



يَوْمُ الْجُمُعَةِ

அல்ஹாஜ். ஏ.எல்.எம். ஹாமீம்
(முகத்தமுஷ் - ஷாதுலீ)

34 வது இலவச வெளியீடு

திருத்திய 2 வது பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.F. Fayiq Fareed.

முதலாவது வெளியீடு - முதலாம் பதிப்பு

# பொருளடக்கம்


1. பாங்குக்கு முன் சலவாத்துச் சொல்லல்.
2. வுளுச் செய்தல்.
3. சுன்னத்தான தொழுகை.
4. பர்ளான தொழுகை.
5. பள்ளிவாசல் (மஸ்ஜித்).
6. வெள்ளிக்கிழமை.
7. ஜும்ஆவின் தினம்.
8. துஆ ஏற்கப்படும் நேரம்.
9. பள்ளியின் காணிக்கைத் தொழுகை.
10. குத்பா (பிரசங்கம்).
11. அணிகளைச் சீர்படுத்தல்.
12. தீங்குகளிலிருந்து காவல் பெற.
13. பட்டோலை வலது கையில் கிடைக்க.
14. அள்ளுங்கள்,அருந்துங்கள்.
15. கைகளை முத்தமிடுவதும், சலாம்கொடுப்பதும்,முஸாபஹா செய்தலும்.
16. நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத்து ஓதுதல்.
17. கூட்டு துஆ.


அல் – ஹாஜ்
ஏ.எல்.எம்.ஹாமீம்
(முகத்தமுஷ் – ஷாதுலீ)

அச்சுப்பதிவு : நிஷின் ஓப்செட் அச்சகம் - கெலிஓய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை !

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே ! சலவாத்தும் சலாமும் நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கே.

ஜும்ஆ நாள் சிறப்பு மிக்கது. அந்நாளில் செய்யப்படும் சிறப்பு பணிகளுக்கு மேலான சலுகைகள் உள்ளன. அச்சலுகைகளை குறைவின்றி நிறைவுபடுத்துவதற்கு ஒரு சில நியதிகள் தேவை, ஆதலால் அவற்றினை ஆழிய நோக்குடன் அறிந்து அவதானித்து செயல்பட வேண்டுமென்பது தான் எல்லோரினதும் குறிக்கோலாக இருக்க வேண்டும்.

ஜும்ஆவின் சிறப்பு பணிகளில் எத்தகைய வழுவும் ஏற்படாதிருக்க இச்சிறு நூல் ஒரளவு உறுதுணையாக இருக்குமென்பது எனது கருத்து.

இத்துடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது திருவாக்கிலிருந்து பிறந்த சில தலைப்புகளில் பல பொன்மொழிகளைச் சேர்த்துள்ளேன். அதனைக் கற்று, கற்றபடி நடந்து இம்மையிலும், மறுமையிலும் விமோசனமடைய அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரிவானாக ! ஆமீன்.

வஸ்ஸலாம்
அன்புள்ள
அல்-ஹாஜ் - ஏ- எல் - எம் - ஹாமீம்
(முகத்தமுஷ் - ஷாதுலீ)

157 கழுகமுவ
கெலிஓயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குக்கு முன் சலவாத்துச் சொல்வது

பாங்குக்கு முன்பும், இகாமத்துக்கு முன்பும் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத்துச் சொல்வது சுன்னத்து என்று அல்இமாமுஷ் ஷெய்குல் கபீருல் பக்ரி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்பதாக ஷாபிஈ மதுஹபில் பிரகடனமான சட்டநூலாகிய : பத்ஹுல் முஈன் என்ற கிரந்தத்தில் ஆதாரம் காட்டப்பட்டுள்ளது.

பாங்கு சொல்லிய பிறகும் சலவாத்துச் சொல்லி வந்த பழக்கமும், பாங்கு சொல்வதற்கு முன்பும் சலவாத்துச் சொல்லும் பழக்கமும் இருந்து வந்ததற்கு அதைப்பற்றிய விளக்கத்தை இமாம் மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் ரஹ்மதுல்லாஹி அவர்கள் தங்களுடைய : மஙானீ ஷாபி மதுஹபின் சட்ட நூலில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹிஜ்ரி 961 -ல்- நஜ்முத்தினுல் தபந்தீ ரஹ்மதுல்லாஹி அவர்களுடைய கட்டளையின் படி சுல்தான் ஹாஜி இப்னுல் அஷ்ரப் அவர்கள் சகல பாங்குகளுக்குப் பின் மினாராக்களில் நாயகம் (ஸல) அவர்கள் பேரில் சலவாத்து அழகாகச் சொல்லும் படி புதிதாக்ககினார். ஆனால், அதற்கு சலாஹுஉத்தீன் இபுனு ஐயூப் என்பவர் காலத்தில் மிஸ்ரிலும் ஷாம் தேசத்திலும் சலவாத் ஓதக்கட்டளை இடப்பட்டது.

ஹிஜ்ரி- 760 - ம் - ஆண்டில் மக்கா மதீனாவிலும் மற்றும் அநேக தேசங்களிலும், மினாராக்களிலும் அல்லாத இடங்களிலும் சலவாத்தை பதக்கட்டுகளாகவும், அழகாகவும் சொல்லப்பட்டது. அதனால் அதிகம் நன்மையும் உண்டு. இன்னும் அதன் நிமித்தம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பாசமும் உகப்பும் ஆசையும் அதிகமாகின்ற படியால் சலவாத் சொல்வதை ஆகுமாக்கப்பட்டதாகவே காணப்படுகிறது.

மேலே கூறும் ஆதாரங்கள் எல்லாம் இமாம்களை நம்பி அவர்களைப் பின்பற்றுகிறவர்களுக்கேயாகும். குர்ஆனுக்கு விளக்கம் திரு நபி (ஸல்) அவர்களின் ஹதீதுகளாகும். ஹதீஸ்களுக்கு சஹாபாப் பெருமக்களின் இஜ்மா∴. ஆகும். இவைகளின் அடிப்படைக் கருத்துக் கொண்டு அமைந்தவை மத்ஹபுக்குரிய நான்கு இமாம்களின் கியாஸ் ஆகும். இவர்களின் கருத்துக்கு அடிப்படையில் உள்ளவைகளே புகஹாக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய சட்டங்களாகும். எனவே, முன்னோர்களான நமது இமாம்கள் உலமாப்பெருமக்கள், தரீக்காக்களின் ஷெய்குமார்கள் எல்லோருமே அவர்களுடைய நூல்களில் எழுதியுள்ள கருத்துக்களின் விளக்கங்களெல்லாம் குர்ஆன் ஹதீஸ்களுக்கும் ஷரீஅத்துக்கும் ஷரஹுக்கும் உட்பட்டே இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, நான்கு மதுஹபுகளுடைய இமாம்கள். புகஹாக்கள் (சட்ட நிபுணர்கள்) மற்றும் சான்றோர்களான இறைநேசர்கள் கூறியவற்றை ஏற்று அவர்கள் நடந்து காட்டிய வழிகளை முன்மாதிரியாகக் கொண்டு நடப்போமாக !

வெற்றியின் பக்கம் முஸ்லிம்களை அழைக்கும் முஅஸ்ஸின் பாங்கொலியிலே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருநாமம் சொல்லப்படுகிறது. அந்தப்புனிதமிக்க பெயரைக் கேட்டதும் எத்தனையோ பேர்கள் இரு கைகளின் பெருவிரல்களையும் மனம் மகிழ முத்தமிட்டு கண்ணியம் மிளிரத் தங்கள் கண்களின் மீது ஒற்றிக் கொள்கின்றார்கள்.

இதற்கு வரலாற்றுப் பின்னணி ஒன்றுண்டு. அகண்ட முஹர்ரம் மாதம் பத்தாவது நாள் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் பள்ளியில் நுழைந்தார்கள். ஹழரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களும் அங்கே இருந்தார்கள். பள்ளியில் நுழைந்த பெருமானாரவர்கள் ஹழரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களுக்கு நேராக இருந்த ஒரு தூணுக்கு அருகில் அமர்ந்தார்கள்.

அப்பொழுது ஹழரத் பிலால் (ரழி) அவர்கள் எழுந்து பாங்கு சொன்னார்கள். ஹழரத் பிலால் (ரழி) அவர்கள் அஷ்ஹது அன்னமுஹம்மதர்ரசூலுல்லாஹ் என்ற தொடரை அடைந்ததும் ஹழரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்கள் தங்களுடைய இரு பெருவிரல் நகங்களை முத்தமிட்டு இரு கண்களிலும் ஒத்திக் கொண்டு ( யாரசூலுல்லாஹ் !! தங்களால் என் கண் குளிர்ந்தது என்று பொருள்படும்) குர்ரத்து ஐனீ பிக்க என்ற அரபித் தொடரை ஓதினார்கள். ஹழரத் பிலால் (ரழி) அவர்கள் பாங்கை நிறைவு செய்த உடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹழரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களை நோக்கி "அபூபக்கரே! நீர் செய்தது போல் யார் செய்கிறார்களோ, அவர்களின் புதிய, பழைய, தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறாகச் செய்த பாவங்கள் யாவற்றையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான்" என்று பொருள்படக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாங்கு சொல்லும் போது எனது பெயரைக் கேட்டதும் யார் தனது இரு பெருவிரல்களைக் கண்களில் வைக்கிறாரோ அவரை நான் சுவர்க்கவாசிகளின் வரிசையிலே நோக்குவேன். அவரை சுவர்க்கத்திற்கு வழி நடத்திச் செல்வேன் என்றும் ஒரு ஹதீதில் கூறப்பட்டுள்ளதையும் மார்க்கப் பெரியார்கள் எழுதியுமுள்ளார்கள்.

ராவி: அல்லாமா நஜிமுத்தீன் ரமலீ (ரஹ்) அவர்கள்
ஆதார: நூல் பைலூர்ராஜிக் அவல்பஹ்ரூர் ராயிக்

எனவே இச்செயல் ஆதாரபூர்வமானது என்றும் கண்ணியமிக்க உலமாக்கள் நிரூபித்துத் தீர்ப்பளித்து விட்ட பின்னர் அவர்களுக்குக் கீழ்ப் படிந்து பின் பற்றி நடப்பது நம் யாவர் மீதும் கடமையாகும். அல்லாஹ் நபி ஆதம் (அலை) அவர்களின் உருவைச் சமைத்து அதில் தன் ஆன்மாவை ஊதியதும் மண் உருவாக இருந்த ஆதம் ( அலை ) அவர்களின் உடல் சதையும் எழும்புமாக மாறியது. தலையிலே நுலைந்த அந்த ஆன்மா கண்களிலே இறங்கியதும் ஆதம் (அலை) அவர்கள் கண்களைத் திறந்து பார்த்தார்கள். அப்பொழுது சுவனத்து வாயிலின் மீது லாஇலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர்ரசூலில்லாஹி என்ற திருக்கலிமா பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும், யாஅலலாஹ்! உன் திருப்பெயருடன் வேறொருவரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளதே. அவர் யார்? என்று வினவினார். அதற்கு அல்லாஹ் "அவர்தாம் உம்முடைய வழியில் ஐம்பத்தொன்றாவது தலைமுறையில் தோன்றவிருக்கும் உலக மாநபியாவார். அவரைப் படைக்கவில்லையாயின் நான் அகிலத்தையும் படைக்கப் போவதில்லை. அண்ட கோலங்களையும் படைக்கப்போவதில்லை" என்று கூறினான்.

இதன் பின் அல்லாஹ் மலக்குகளை நோக்கி, ஆதம் (அலை) அவர்களுக்குப் பணியுமாறு பணித்தான். இப்லீஸைத் தவிர்த்து ஏனையோர் அனைவரும் தம் முன் பணிந்தெழுந்ததைக் கணடு வியப்புற்ற ஆதம் (அலை) அவர்கள் அதற்கான காரணம் யாது எனறு வினவினர். அதற்கு அல்லாஹ், நூரே முகம்மதிய்யா உம் முதுகந்தண்டில் இருப்பதனால் அவர்கள் உம் முன் பணிந்தெழுந்தனர் என்று மறுமொழி பகர்ந்தான். அப்பொழுது ஆதம் (அலை) அவர்கள் அந்த நூரே முஹம்மதிய்யாவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முன் அருளுமாறு வேண்ட அதனை அவர்களின் நெற்றியில் ஒலிரச் செய்தான் அல்லாஹ். அதனை அமரர்கள் கூட்டங் கூட்டமாக வந்து தரிசித்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது ஆதம் (அலை) அவர்களுக்குத் தாமும் அதனைக் கண்டு களிக்க இயலவில்லையே என்று பெருவருத்தம் ஏற்பட்டு தாமும் அதனைத் தரிசித்து மகிழ அருள்பாலிக்குமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சினர். உடனே அல்லாஹ் அதனை அவர்களின் இரு பெரு விரல்களிலும் ஒளிரச் செய்தான். அதுகண்டு பெரிதும் மகிழ்ந்த ஆதம் (அலை) அவர்கள் தம் பெருவிரல் இரண்டையும் முத்தமிட்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

இதனையே ஜிப்ரீல் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து கூறியபொழுது "பாங்கு சொல்லப்படும் பொழுது என் திருப்பெயரைசெவியுற்றதும் ஒருவன் தன் இரு பெருவிரல்களையும் முத்தமிட்டு தம் கண்களில் தடவினால் அவனுக்கு ஒரு போதும் கண் நோய் வராது" என்று நவின்றனர். அப்பொழுது மர்ஹபன் பிஹபீபீ வகுர்ரத்துஜனி முஹம்மதிப்னு அப்துல்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம், என்று கூறவேண்டும் என ஷன்வானி என்ற நூலில் எழுதப்பட்டிருக்கின்றது.

***

வுலு செய்தல்

1 தொழுகைக்காக ஒருவர் வுலுச் செய்வது அவ்வுலுவை அழகாகச் செய்வாராயின் அவரது தாய் அவரைப் பிரசவித்த நாளைப் போல் சகல பாவத்தை விட்டும் நீங்கி விடுவார்.

2 தொழுகைக்காக ஒருவர் வுலுச் செய்வது - அவ்வுலுவை அழகாகச் செய்து பின்னர் தொழுகைக்கு நின்று தொழுது விடுவாராயின் அவருக்கும் அவர் தொழுகின்ற மற்றொரு தொழுகைக்குமிடையில் அவரது பாவத்திற்குப் பரிகாரம் செய்யப்படும்.

3 வுலுவுடன் ஒருவர் நித்திரைக்குச் சென்று அவ்விரவிலேயே அவர் மறித்து விடுவாராயின் அவர் அல்லாஹ்விடத்தில் ஷஹீதானவராக இருக்கின்றார்.

4 சுத்தமாக இருக்கும் போது ஒருவர் வுலு செய்வாராயின் அவருக்கு அல்லாஹ் பத்து நன்மைகளை எழுதுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 சுத்தமாக இருந்து தூங்குபவர் வணங்கிக் கொண்டிருக்கின்ற நோன்பாளியைப் போலாகிறார்.

6 வுலுவில்லாதவருக்குத் தொழுகையில்லை. அல்லாஹ்வுடைய திருநாமத்தை ஓதாதவருக்கு வுலுவில்லை.

7 சுத்தம் ஈமானில் பாதி.

8 அவசியமாக வுலு செய்ய வேண்டியது ஒருமுறை. இருமுறை கழுகுபவருக்கு நற்கூலியில் இரட்டைப் பிணை இருக்கிறது. மும்முறை கழுவுவது என்னுடைய வுலுவாகவும், எனக்கு முன்னுள்ள நபிமார்களின் வுலுவாகவுமிருக்கிறது.

9 உங்களில் ஒருவர் ஹததானால் (வுலுவில்லாமலானால்) அவர் வுலுச்செய்யும் வரை அவரது தொழுகையை அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான்.

10 வுலுவுடன் வுலுசெய்வது பிரகாசத்துடன் பிரகாசம் (சேர்வதைப்) போலிருக்கிறது.

மனிதன் சுத்தமாக இருப்பதால் ஏற்படும் பயனையும் பிரயோஜனத்தையும் எவரும் மறுக்க முடியாது. தினசரி மனிதர் குளித்து ஆடையைக் கழுவி அணிந்திருப்பது புறச்சுத்தத்தைச் சார்ந்ததேயாகுமென்றாலும் வுலுசெய்வது அதனைப் பார்க்கிலும் அதிகக்கடப்பான சுத்தமாக இருக்கிறது. மேற்கூறப்பட்ட மாதிரி உள்ள ஒருவர் தொழுகைக்குச் செல்ல முடியாது. அவர் அசிங்கமானவர் என்பது மார்க்கத்தீர்ப்பு இதனை சிறு தொடக்குள்ளவர் என்பதாக மதப்பரிபாஷையில் கூறுவர். இவ்விதமான அசிங்கமுமில்லாமல் பரிபூரணமாக சுத்தமாக இருப்பவருக்கு இம்மையிலும் அநேக பிரயோஜனங்கள் ஏற்படுவதுடன், இந்த ஹதீதுகளிற் கூறப்பட்டவாறு மறுமைப்பேறுகளுமிருக்கின்றன. இவைகளிற் கூறப்பட்ட நன்மைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருப்பது போல் தோன்றலாம். அவை வித்தியாசப்படவில்லை. வுலு செய்பவர்களது பக்திக்குத்தக்கவாறு மறுமைப் பேறுகள் வித்தியாசப்படுத்தியே அளிக்கப்படும். அவைகளைத் தான் இந்த ஹதீதுகளில் வித்தியாசப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னத்தான தொழுகை

1 எவர் பன்னிரண்டு ரகஅத்துக்களை, லுஹருக்கு முன் நான்கையும், அதற்குப் பின் இரண்டையும், மக்ரிபுக்குப் பின் இரண்டையும் இஷாவுக்குப் பின் இரண்டையும் சுபஹுக்கு முன் இரண்டையும் (சுன்னத்தாக) வழிபாடாகத் தொழுது வருகிறாரோ அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீடு கட்டப்படும்.

2 லுஹருக்கு முன் நான்கு ரகஅத்தைத்தொழுபவரின் தசையை அல்லாஹ் நரக நெருப்புக்கு ஹறாமாக்கிவிடுகிறான்.

3 அல்லாஹ்வும், மலக்குகளும் தவிர வேறு ஒருவரும் தன்னைக்காணாதவாறு தனிமையில் எவர் 2 ரகஅத்துகளை (தஹஜ்ஜத்) தொழுகிறாரோ, அவருக்கு நரகை விட்டு உரிமைச் சீட்டு அளிக்கப்படும்.

4 இருண்ட வீட்டில் பூர்த்தியான ருகுஉ சுஜூதைக் கொண்டு இரண்டு ரக அத்துகளைத் தொழுத எந்த அடியானுக்கும் வேதனையும் கேள்வி கணக்குமின்றி சுவர்க்கம் வாஜிபாகாமல் இருப்பதில்லை.

5 அஸருக்கு முன் எவர் இரண்டு ரகஅத் தொழுகிறாரோ அவருக்கு அல்லாஹ் நரக நெருப்பை விட்டும் உரிமைச் சீட்டெழுதுகிறான்.

6 மக்ரிபுக்குப் பிறகு யாருடனும் பேசுவதற்கு முன்னதாக எவர் இரண்டு ரகஅத்துக்களைத் தொழுகின்றாரோ, அவ்விரண்டும் இல்லிய்யீன் என்னும் சுவர்க்கலோகத்தில் உயர்த்தப்படும்.

7 எவர் இஷாவுக்கு முன் நான்கு ரகஅத்துக்களைத் தொழுகின்றாரோ, மஸ்ஜிதுல் அக்ஸாவில் லைலதுல் கத்ரை அடைந்தவரைப்போலாகின்றார்.

8 எவர் லுஹாத்தொழுகையை ஈமானுடனும், நன்மையைத் தேடியும் பன்னிரண்டு ரகஅத்துக்களைத் தொழுகிறாரோ அவருக்கு அல்லாஹுத்தஆலா 2200 நன்மைகளை எழுதுகிறான். 2200 தீமைகளை அவரைவிட்டும் அழிக்கிறான். 2200 அந்தஸ்தை அல்லாஹ் அவருக்கு உயர்த்துகிறான். சுவர்க்கத்தில் அவருக்கு ஒரு வீட்டை அல்லாஹ் கட்டுகிறான். அவருடைய பாவங்கள் யாவற்றையும் அல்லாஹுத்தஆலா மன்னித்து விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னத்தான செய்கைகளை நிறைவேற்றுவது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பையும், பக்தியையும் காண்பிக்கிறது. இந்த ஹதீதுகளின் சுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதற்குரிய புண்ணியத்தைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. ( லுபாபுல் - அக்பர் )

பர்லான தொழுகை

இஸ்லாம் ஐந்து காரியங்கள் மீது அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது. அல்லாஹ்வையும் பெருமானாரையும் விசுவாசித்து தொழுகையை நிலை நிறுத்துவதும், ஸக்காத்தைக் கொடுப்பதும், ரமழான் மாத நோன்பும், பிரயாணத்துக்குச் சக்தியுள்ளவர் ஹஜ்ஜு செய்வதுமாகும்.

1 உங்களின் ஐந்து நேரத தொழுகையையும் தொழுங்கள். உங்களின் பொருள்களுக்கு ஜகாத்துக் கொடுங்கள். ரமழான் மாதத்தில் நோன்பிருங்கள். உங்களின் றப்பின் வீட்டை ஹஜ்ஜு செய்யுங்கள். கேள்வி கணக்கின்றி நீங்கள் சுவர்க்கம் பிரவேசிப்பீர்கள்.

2 தொழுகை சன்மார்க்கத்தின் தூண். அதனை நிலை நிறுத்தியவர். சன்மார்க்கத்தை நிலை நிறுத்தி விட்டார். அதனை விட்டு விட்டவர் சன்மார்க்கத்தை இடித்து விட்டார்.

3 ஒரு பெண் ஐந்து நேரத தொழுகையையும் தொழுது, அவளது பொருளுக்கு ஜகாத் கொடுத்து, ரமழான் மாதத்தில் நோன்பு வைத்து அவளது கணவனுக்கு அவள் கீழ்ப்படிந்து அவளது வெட்கஸ்தலத்தைப் பேணிக் கொண்டாளாயின் அவள் இஷ்டப்பட்ட எந்த வாசல் வழியாகவும் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாள்.

4 ஒவவொரு வஸ்துவுக்கும் ஓர் அடையாளமுண்டு. ஈமானுக்கு அடையாளம் தொழுகை.

5 நான் தொழுவதை நீங்கள் என்னைப் பார்த்தது போல் தொழுங்கள்.

6 தொழுகையை வேண்டுமென்றே விட்டவர் காபிராகி விடுவார்.

7 நபிகள் (ஸல்) அவர்களிடம் அமல்களில் எது சிறந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டபோது தொழுகையை ஆரம்ப நேரத்தில் தொழுவது என்றார்கள்.

8 யார் இஷாத் தொழுகையை ஜமா அத்துடன் தொழுவாரோ அவர் பாதி இரவு வணங்கியவரைப் போலாவார்.

9 சுபஹு அஸரு தொழுகையைத் தொழுதவர் நரக நெருப்பில் புகுத மாட்டார்(முஸ்லிம்).

10 தனித்து தொழுவதைவிட ஜமாஅத்துடன் தொழுவது 27 மடங்கு சிறந்தது.

ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவது முஸ்லிம் ஆண் பெண் இருபாலாருக்கும் கடமையாகும். இதனை வேண்டுமென்றே நிறைவேற்றாமல் மன முரண்டாக இருப்பது சன்மார்க்கத்தை நிராகரிப்பதற்குச் சமன். ஆதலால் தொழுகையை வேண்டுமென்றேவிட்டவர் காபிர் என்பதாக கூறப்படுகிறது.

***

பள்ளிவாசல் (மஸ்ஜிது)

1 மஸ்ஜிது பயபக்தியுள்ள ஒவ்வொருவருக்கும் வீடு.

2 ஒரு மனிதன் மஸ்ஜிதைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்க (அதாவது எந்நேரமும் மஸ்ஜிதிலேயே இருக்க) நீங்கள் கண்டால் அவர் மூமின் என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்.

3 மஸ்ஜிதில் எவர் உலக சம்பந்தமான பேச்சைப் பேசுகிறாரோ அவருடைய 40 வருட (நற்) கிரிகைகளை அல்லாஹ் அழித்து விடுவான்.

4 மஸ்ஜிதில் வீண் பேச்சுக்களைப் பேசுபவர்களான புறங்கூறுவோர்களின் வாய் நாற்றத்தைக் குறித்து மலக்குகள் முறையிடுகிறார்கள்.

5 ஸ்தலங்களில் தீங்கானது கடைத் தெருக்கள். ஸ்தலங்களில் நல்லது மஸ்ஜிதுகள்.

6 உங்களில் ஒருவர் மஸ்ஜிதுக்குள் பிரவேசித்தால் இரண்டு ரகஅத்துத் தொழாமல் உட்காரக் கூடாது.

7 மஸ்ஜிதானது அதிலுள்ளவர்கள் இவ்வுலகப் பேச்சைப் பேசுபவர்களைக் குறித்து முறையிட வானத்தின் பால் உயரும். மலக்குகள் அதனை முன்னோக்கி வந்து நீ திரும்ப மீண்டு விடு அவர்களை அழிக்கும் படி நாங்கள் ஏவப்பட்டிருக்கின்றோம். என்று கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 மஸ்ஜிதில் ஒரு விளக்கைக் கொளுத்துபவருக்கு அவ்விளக்கின் பிரகாசம் அம்மஸ்ஜிதில் இருக்கும் வரை மலக்குகள் பாவ மன்னிப்பு தேடுவார்கள்.

9 மஸ்ஜிதில் ஒருவர் ஒரு பாயை விரிப்பாராயின் அந்தப்பாய் முற்றுப் பெற்று போகும் வரை 70 ஆயிரம் மலக்குகள் அவருக்காகப் பிழை பொறுக்கத்தேடுவார்கள்.

10 மஸ்ஜிதிலிருந்து ஓர் அருவருப்பை ஒருவர் அகற்றுவாராயின் அவரது நாவிலுள்ள அவர் பாவங்களில் மிகப் பெரியதை அல்லாஹுத்தஆலா அகற்றுவான்.

மஸ்ஜிது அல்லாஹுத்தஆலாவை வணங்குவதற்கெனப் பிரத்தியேகப்படுத்தப்பட்ட இடம். அந்த இடம் உலகிலுள்ள எல்லா இடங்களிலும் சிறந்ததாகும். அங்கு பேசுவதால் மற்றவருடைய வணக்கத்திற்கு இடையூறு ஏற்படுமாதலால் அங்கு பேசாமல் இருப்பதுடன் வணக்கம் புரிய வேண்டியதும் அதற்குச் செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்துவதும் அவசியமாகும். ( ஆதாரம்- லுபாபுல் அக்பர் )

***

வெள்ளிக்கிழமை

"பொழுது புலரும் நாட்களிலெல்லாம் இதுவே மாண்புடையது" என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். சூரியன் முதன் முதலாக புலர்ந்ததும் இந்நாளில் தான். ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டதும், மண்ணகம் வந்ததும், மன்னிக்கப்பெற்றதும், மரணமடைந்ததும் இந்நாளிலே தான். (அபூதாவூத்) இந்நாளில்தான் முதன் முதலாக சூர் (எக்காளம்) ஊதப்படும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்னையின் வயிற்றில் கருவுற்றதும் இந்நாள் இரவில்தான். (மிஷ்காத்)

இந்நாளில்தான் மறுமையில் விசாரணை நடைபெறும். இந்த ஜும்ஆத்தொழுகை வாரத்திற்கு ஒரு முறையாவது மக்களை ஒன்று சேர்க்கும் அரிய பணியைச் செய்கிறது. இது இரண்டு பெருநாட்களை விட உயர்வுடையது. இது பகீர்களின் ஹஜ் என்றும், மிஸ்கீன்களின் ஈத் பெருநாள் (ஹஜ்ஜுல் புகராயி வஈதுல் மஸாகீன்) என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். வெள்ளிக்கிழமை குளித்து தூய ஆடை அணிவது சுன்னத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இறுதியாக வந்த சமூகத்தவராயினும் நாமே மறுமையில் எல்லோருக்கும் முந்தி இருப்போம். நம்முடைய ஜும்ஆ நாள் எல்லோருடைய ஜும்ஆவுக்கும் முந்தி உள்ளது. யூதர்கள் நமக்கு ஒரு நாள் பின்பும். கிறிஸ்தவர்கள் யூதர்களுக்கு ஒரு நாள் பின்பும் உள்ளனர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

ஜும்ஆவுக்காக முதன்முதலாகப் பள்ளி செல்பவர் ஓர் ஒட்டகத்தையும், அடுத்து செல்பவர் ஓர் மாட்டையும், அதற்கு அடுத்து செல்பவர் ஆட்டையும், அதற்கு அடுத்து செல்பவர் ஓர் கோழியையும், அதற்கு அடுத்து செல்பவர் ஒரு குருவியையும், அதற்கு அடுத்து செல்பவர் ஓர் முட்டையையும் அல்லாஹ்வுக்காக குர்பான் செய்த நன்மையைப் பெறுவார் என்றும் இவ்வாறு படிப்படியாக நன்மை குறைந்து விடுமென்றும், கதீப் குத்பாப் பேருரை நிகழ்த்தத் துவங்கியதும் பள்ளியின் வாயிலின் அமர்ந்து இந்நன்மைக்குரியவர்களை பதிந்து கொண்டிருக்கும் மலக்குகள் தங்களின் பதிவு ஏட்டை மூடிவிட்டு குத்பாக் கேட்க வந்து விடுவர் என்றும் அதன்பின் வருவோரின் பெயர் அந்த ஏட்டில் இடம் பெறாதென்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

"ஒருவர் ஜும்ஆத் தொழ பள்ளியை அடைந்த பொழுது முன்னிலையில் இடவசதியில்லாதிருக்க, மக்களின் பிடரிகளைக் கடந்து கொண்டு முன்னணியை நோக்கி செல்வாராயின், அவர் நரகத்திற்கும் பாலம் அமைத்தவராகிறார்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். (திர்மிதி)

***

ஜும்ஆவின் தினம்

1 நாட்களில் நாயகமானது ஜும்ஆவின் தினம் வெள்ளிக்கிழமை.

2 வெள்ளிக்கிழமையன்று குளிப்பவருக்கு அவரது குற்றங்களும் தப்புதங்களும் மன்னிக்கப்படும்.

3 வெள்ளிக்கிழமை பகலிலும் வெள்ளி இரவிலுமாக 24 மணி நேரமிருக்கிறது. ஒவ்வொரு மணிக்கும் நரகத்தை விட்டும் 65 இலட்சம் பேர்களை அல்லாஹுத்தஆலா உரிமையிடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 (தக்க) காரணமின்றி ஜும்மாத் தொழுகையை விட்டவர் ஒரு தீனாரை (அதாவது தங்க நாணயத்தை) த தருமம் செய்ய வேண்டும். ஒரு தினார் கிடைக்கவில்லையானால் அரை தினார் (தர்மம் செய்ய வேண்டும்)

5 அவசியமில்லாமல் ஜும்ஆத் தொழுகையை விட்டவரின் இருதயத்தின் மீது அல்லாஹ் முத்திரை வைத்து விடுவான்.

6 வெள்ளிக்கிழமையில் அல்லது வெள்ளி இரவில் எவர் மரிக்கிறாரோ கப்றுடைய வேதனை அவரை விட்டும் அகற்றப்படும்.

7 வெள்ளிக்கிழமை அன்று இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கும் போது தனது (முஸ்லிம்) தோழரிடம் பேசாதே என்று கூறினால் அல்லது பேசினால் அல்லது விளையாடினால் அல்லது தன் கையாலேனும், தலையாலேனும் சமிக்ஞை செய்தால் (அவருக்கு அத்தொழுகையின் புண்ணியம் இல்லாமற் போவதன் மூலம்) அவர் வீணாகி விட்டார். எவர் வீணாகி விட்டாரோ அவருக்கு ஜும்ஆ இல்லை.

8 ஜும்ஆவுக்காக ஸ்நானம் செய்வது புத்தி வயதடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

9 ஜும்ஆவை அடைந்தவருக்கு நூறு ஷஹீதின் நற்பயனிருக்கிறது.

10 கதீப் மிம்பரின் மீது ஏறினால் உங்களில் ஒருவரும் பேசக் கூடாது. எவர் பேசுகிறாரோ, அவர் வீணாகி விட்டார். வீணாகி விட்டவருக்கு ஜும்ஆ இல்லை. நீங்கள் கிருபை செய்யப்படும் பொருட்டு பேசாது இருங்கள்.

வாரம் ஒரு முறை ஊரிலுள்ள எல்லா ஜனங்களும் ஒன்று கூடி ஒருவரை ஒருவர் சந்தித்து ஷேமலாபங்களை விசாரித்துக் கொள்வதற்காகவும், மத சம்மந்தமாகத் தெரிந்து கொள்வதற்கும் ஜும்ஆ முக்கிய சாதனமாக இருப்பதுடன், பலர் கூடித் தொழுவதில் எவரேனும் நல்லோரிருக்கக் கூடும். அவர் பொருட்டால் தொழுகையும் துஆவும் கபூலாகக் கூடும்.
(ஆதாரம் - லுபாபுல் அக்பார்)

ஒருவர் ஜும்ஆத் தொழுகையில் இரண்டாவது ரகஅத்தில் ருகுஉவுக்குப்பின் வந்து கலந்து ஜும்ஆத் தொழுகை இரண்டு ரகஅத் தொழுவதாக நிய்யத் செய்து தக்பீர் கட்டிக் கொண்டாலும்அவர் இமாம் ஸலாம் கொடுத்த பின் எழுந்து ளுஹர் போன்று நான்கு ரகஅத்துகள் தொழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பற்றி அரபியில் பின்வரும் பழமொழி ஒன்று உள்ளது. ஸல்லா மாலம் யன்வி வ நவா மாலம் யுஸல்லி. (ஒரு தொழுகையில் ஒருவன் நிய்யத் செய்யாததைத் தொழுகிறான். தொழாததை நிய்யத் செய்கிறான்.) ஆதாரம் அல்லாமா மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் அவர்கள் எழுதிய பத்ஹுஃத்தையான் என்ற ஷாபிஈ மத்ஹபின் நூல்

இந்நாளில் காலையில் சூரத்துல் கஹ்ப் ஓதுவோருக்கு அடுத்த ஜும்ஆ வரையுள்ள காலத்தை அது ஒளி மயமாக்கும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். இன்று அதிகமதிகமாக ஸலவாத்து ஓதுதல் மாண்புடையதாகும்.

ஜும்ஆ இரவில் உயிரோடுள்ளவருக்கும் இறந்தோருக்கும் இடையே அரூபமான சந்திப்பு ஏற்படுவதாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மௌத்தானவர்கள் மார்க்கப் போரில் மரணமடைந்த பலன் எழுதப்படும் என்றும் அன்று நரகத்தின் நெருப்பு எரிக்கப்படமாட்டது என்றும் அன்று பகலிலோ இரவிலோ மரணமடைபவர் கப்ரின் துன்பத்திலிருந்து காக்கப்பெறுவாரென நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

***

துஆ ஏற்கப்படும் நேரம்

வெள்ளிக்கிழமையன்று ஒரு நேரம் இருக்கிறது. அந்த நேரத்தில் இறைஞ்சுதல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எந்த ஒரு பொருளை விட்டும் பாதுகாவல் தேடினும் அல்லாஹ் அதனைப் பாதுகாக்கிறான் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். லைலதுல் கத்ர் இரவு போன்று இதுவும் மறைவாகவே வைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ஐம்பது விதமான கருத்துக்கள் உள்ளன. அவற்றில் சில வருமாறு :-

1 இரவு பகல் முழுவதும் இந்நாளில் அந்நேரம் ஒவ்வொரு வாரமும் மாறி மாறி வருவதால் அன்று இரவு பகல் முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டால் அந்நேரம் கிடைத்து விடும் என இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

2 மக்ரிபுக்கும் இஷாவுக்குமிடையில்

3 நள்ளிரவு 12 மணிக்கு (இப்பொழுது தான் "அஸ்ஹாபுத் தௌபா" என்ற வானவர்கள் அலுவல் மாற்றிக்கொள்கின்றனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 சஹர் நேரம் இப்பொழுதுதான் யஃகூப் (அலை) அவர்கள் தம் மக்களின் பிழை பொறுத்தருளுமாறு இறைஞ்ச அவர்களின் மக்கள் பின்னிருந்து ஆமீன் கூறினர்.

5 சுபஹுக்கும் சூரிய உதயத்திற்கும் இடையிலுள்ள நேரம்.

6 பொழுது புலர்ந்து ஒரு பனை மரம் உயரம் உயரும் வரை என அபூதர் (ரலி) அவர்கள் கூறுகின்றனர்.

7 இமாம் கொத்பா ஓத மிம்பரில் காலெடுத்து வைக்கும் நேரம்.

8 இரண்டு கொத்பாக்களும் ஓதப்படும் நேரம்.

9 இரண்டு கொத்பாக்களுக்கும் இடையில் இமாம் நடு இருப்பில் இருக்கும் நேரம்.

10 ஜும்ஆத் தொழுகையில் இமாம் சூரா பாத்திஹா ஓதி ஆமீன் கூறும் வரை.

11 இமாம் கொத்பா ஓதத்துவங்கி தொழுது முடிக்கும் வரை

12 இமாம் இரண்டாவது கொத்பாவுக்கு முன் அமர்வதிலிருந்து தொழுது முடிக்கும் வரை

13 ஜும்ஆத் தொழுகை தொழுது முடிந்தவுடன்.

14 அன்று அஸர் தொழுகைக்குப் பின்

15 அன்று அஸர் நேரத்திலிருந்து மக்ரிபுக்குள்

16 அன்று சூரியன் மேற்கே சாயும் நேரம்.

17 அன்று மக்ரிபுக்கு பாங்கு சொல்லும் நேரம் வரை

18 அன்று பொழுதுபடும் நேரம். சிறுவர், சிறுமியரை வெளியே அனுப்பி அதனைப் பார்த்து வரச் செய்து ஆயிஷா (ரலி) அவர்கள் (மற்றொரு வரலாற்றின் படி பாத்திமா (ரலி) அவர்கள்) துஆ கேட்பர் என்று கூறப்படுகிறது.

***

பள்ளியின் காணிக்கைத் தொழுகை
(தஹிய்யத்துல் மஸ்ஜிது தொழுகை)

பள்ளியினுள் வுலுவுடன் சென்றவர் பள்ளியின் காணிக்கையாக இரண்டு ரகஅத்துத் தொழுவது சுன்னத்தாகும். ஆனால் இமாம் குத்பா ஓதிக்கொண்டிருக்கும் வேளை பள்ளியினுட் சென்றவர் இத்தொழுகை தொழுவதை அல்இமாம் ஷாபியீ ரஹிமஹுல்லாஹு அவர்கள் மட்டும் ஆதரித்திருக்கிறார்கள். என்றாலும் வெகுவிரைவாக குறுகிய நேரத்திலேயே இதைத் தொழுது விட்டு இமாமுடைய குத்பாவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க முனைய வேண்டுமென்று இமாம் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். பின்வரும் நபிமொழி இதற்கோர் ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது.

உங்களில் எவர் ஜும்ஆ நாளில் இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கையில் (பள்ளிக்குள்) வந்தால், அவர் (பள்ளியின் காணிக்கையாக) இரண்டு ரகஅத்துக்களைத் தொழுது கொள்வாராக !அவ்விரண்டையும் நீட்டாமல் சுருக்கிக் கொள்வாராக ! (நபி மொழி - முஸ்லிம்)

குறிப்பு :- இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கும் சமயம் பள்ளிக்குள் வந்தவர் பள்ளியின் காணிக்கையாகத் தொழும் இவ்விரண்டு ரகஅத் தொழுகை, ஷாபியீ மதுஹபைத் தவிர வேறு எந்த மதுஹபுகளிலும் அனுமதிக்கப்படவில்லை. தவிர இமாம் குத்பா ஓதுவதற்கு முன்னர் பள்ளிக்குட் சென்றவர் உட்கார்ந்து விட்டு நேரம் கடந்து பிறகு இமாம் மிம்பரில் ஏறியதும் எழுந்து இத்தொழுகையைத் தொழுவது எக்காரணத்தைக் கொண்டு அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு தொழப்படுவது ஷாபியீ மதுஹபைத் தழுவிய சட்ட மேதைகளின் பலமான ஆதாரப்படி ஹறாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றியும் இத்தொழுகை மிகக் குறுகிய நேரத்திலேயே தொழுது முடிக்கப்பட வேண்டுமென்பதை மேலே உள்ள நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. ஆனால், இத்தொழுகை நீங்களாக வேறு எந்தத் தொழுகையும் இமாம் குத்பா ஓதிக்கொண்டிருக்கையில் தொழக்கூடாதென்பதும் அச்சட்ட மேதைகளின் முடிவான தீர்ப்பாகும். இது இவ்வாறிருக்க, இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கும் சமயம் பள்ளியினுள் நுழைந்த அல்லது ஏற்கனவே அதனுள் வீற்றிருந்த சிலர் - பலர் ஏதோ ஒரு தொழுகையில் ஈடுபடுகின்றனர். நிலையில் நின்றவாறு இரு கைகளையும் நீட்டி ஏதோ பிரார்த்திக்கின்றனர். அன்று தவறிப்போன சுபஹுத் தொழுகையை அன்னவர்கள் அது சமயம் களாவாகத் தொழுது குனூத்து ஓதுகின்றனரா? கூடவே கூடாது! இவ்வாறு தொழுபவர்கள் தங்களுடைய அறியாமையினால் ஏற்படுகின்ற இத்தவற்றை உணர்ந்து கொள்ள வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் நாயகத்தின் திருநாமத்தை அல்லது அன்னவர்களின் மகிமையை இமாம் குத்பாவில் கூறுமிடத்து அவர்கள் மீது சலவாத்துச் சொல்வதில் தொனியை உயர்த்திச் சொல்வது சுன்னத்தாகும்

சஹாபாப் பெருமக்கள் ஒவ்வொருவரினதும் நாமத்தை அல்லது அன்னவரின் மகிமையை அவர் கூறுமிடத்து, அன்னவர்பால் றலியல்லாஹுஅன்ஹு என்று சொல்வதிலும் அவர் ஓதும் துஆக்களுக்கு ஆமீன் சொல்வதிலும் தொனியை தாழ்த்திச் சொல்வது சுன்னத்தாகுமென்பது சட்டமேதைகளின் கூற்று.

குறிப்பு :-

பள்ளியில் தொழுது கொண்டிருப்பவருக்கு குழப்பம் ஏற்படும் வண்ணம் திருக்குர்ஆன், திக்ரு, சலவாத்து முதலியவைகளை இரைந்து சப்தமிட்டு ஓதல் அனுமதிக்கப்படாது. இவ்வண்ணம் இரைந்து சப்தமிட்டு ஓதுவதனால் தொழுது கொண்டிருப்பவர்களுக்கு இடையூறு உண்டாகிறபடியால் அவரது உள்ளம் வேறு திசைக்குத் திருப்பப்பட்டு விடுகின்றன. ஆதலால் இரைந்து சப்தமிட்டு ஓதல் கூடாதென்பதன் சட்டம் ஜும்ஆ மாஸ்ஜிதுக்கு மாத்திரம் தான் என்றில்லாமல் இதர எல்லா மஸ்ஜிதுகளுக்கும், பள்ளியின்றி தனியார் தொழுகைக்குக் கூட பொருந்தக் கூடிய பொதுவான சட்டமாகும். எனவே அடுத்தவரின் நலன் கருதியும் சிந்தித்து செயல்படுக.

பள்ளிக்குச் செல்லும் போது அருவருக்கத்தக்க அசூசையான ஆடையுடனோ அல்லது பல் துலக்காமல் வாய் நாற்றத்துடனோ அல்லது புகை வஸ்துக்கள் பாவித்து அவற்றின் துர்வாடையுடனோ பள்ளிக்குச் செல்வதும் எல்லோராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இவ்வுலகிலுள்ள மஸ்ஜிதுகள் அனைத்தும் அல்லாஹ்வின் இல்லங்களாகும். எனவே அவற்றுள் தொழுபவர்கள் யாவரும் அல்லாஹ்வைத் தரிசிக்கவரும் விருந்தினர்களாவர். எவர் அல்லாஹ்வைத் தரிசிக்க வருகின்றாரோ அவர் அவனது இல்லத்தை கண்ணியப்படுத்தியவராவார்.
(ஹழரத் - உமர்பாரூக் (ரலி) அவர்கள் ஒரு பொன்மொழிக்கிரந்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் மீது ஒரு காலம் வரும் அப்போது அவர்களுடைய உலக விவகாரங்கள் பற்றிய பேச்சுக்கள் அவர்களுடைய மஸ்ஜிதுகளிலேயே நடைபெற்றாலும் அத்தகையவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ளாதீர்கள். அவர்களைப்பற்றி அல்லாஹ்வுக்கு எத்தகைய தேவையும் இல்லை.(நபிமொழி - பைஹகீ)

ஜும்ஆ நாளன்று இமாம் குத்பா ஓதிக்கொண்டிருக்கும் போது, ஒருவர் மற்றவரோடு உரையாடிக்கொண்டிருப்பவர் புத்தகங்களைச் சுமக்கும் கழுதைக்கு ஒப்பாகின்றார். அவருக்கும் அவரைப் பார்த்து வாய் மூடும்படிச் சொல்பவருக்கும் ஜும்ஆவுடைய பலன் கிடைப்பதில்லை.(நபிமொழி - அஹ்மது)

பள்ளியுட் சென்றவுடன் இஃதிகாப் நிய்யத்துச் செய்து தங்குவதனால் உள்ளத்துக்கு ஆறுதல் தருகின்றது. அல்லாஹ்வுடைய பேரருள் சுரக்கவும் அமரர்களுடைய பிரார்த்தனைக்கும் அன்னவர்கள் நமக்காகப் பாவமன்னிப்புக் கோருவதற்கும் இது சிறந்ததோர் வழிமுறையாகும்.

பள்ளியினுள் இஃதிகாப் நிய்யத்துடன் தங்குபவர் வுலுவுடனிருப்பது சாலச் சிறந்தது. ஏனெனில் அது இறைவழிபாட்டுக்கு மூலாதாரமாக இருப்பதனால் உடல் உள பரிசுத்தத்தின் கருவூலமாக மதிக்கப்படுகின்றது.

ஒரு ஒட்டகையில் பால் கறக்கும் நேரம் வரை எவர் பள்ளியுள் இஃதிகாபுடன் தங்குகிறாரோ அவர் ஓர் அடிமையை உரிமையிட்ட (பலனை அடைந்த) வராகின்றார்.
(நபிமொழி ஒரு ஹதீது கிரந்தம்)

மஸ்ஜிதுடைய சிறப்பு நோக்கி அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் அதற்குள்ள கண்ணியத்தின் சின்னங்களாகும்

உங்களில் எவர் பள்ளிக்குட் பிரவேசித்தால் வலது காலை முன்வைத்து அல்லாஹ்வே ! உன்னருள் வாயிலை எனக்குத் திறந்தருள். அல்லாஹும்ம மப்தஹ்லி அப்வாப ரஹ்மத்திக்க என்றும், வெளியே வந்தால் இடது காலை முன்வைத்து அல்லாஹ்வே ! உன் தயவில் நின்று நீ எனக்கருள் உன்னை நான் வேண்டுகிறேன். அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின்பள்ளிக்க வரஹ்மத்திக் என்றும் சொல்வாராக.(நபி மொழி - முஸ்லிம்)

உங்களில் எவர் பள்ளியுட் சென்றால் அவர் அங்கு இருப்பதற்கு முன்னர் இரு ரகஅத்துகள் கொண்ட பள்ளிக்குரிய தஹ்யத்துல் மஸ்ஜித் எனும் காணிக்கைத் தொழுகையைத் தொழுது கொள்ளவும். (நபிமொழி - புகாரி முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு தினம் மஸ்ஜிதுந் நபவியில் படுத்திருந்தேன். அப்பொழுது என்மீது ஒரு சிறு கல் விழுந்தது. அது யார் வீசி எறிந்தார் என்று திரும்பிப் பார்த்தேன். அது சமயம் ஹசரத் உமர் பாரூக் (ரழி) அவர்களைக் கண்டேன். அதோ மஸ்ஜிதின் ஒரு பகுதியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த இருவரைச் சுட்டிக்காட்டி அவ்விருவரையும் அழைத்து வரும்படி என்னைப் பணிந்தார்கள். நான் அவ்விருவரையும் அழைத்து வந்தேன். நீங்கள் இருவரும் யார் ? எங்கிருந்து வந்தீர்கள் ? என்று அவர்கள் வினவ தாயிபு நகரம்' என்று அன்னவர்கள் விடையளித்தனர். நீங்கள் நபிகள் நாயகத்தின் மஸ்ஜிதில் அமர்ந்து உரக்க சப்தமிட்டு பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் மதீனா வாசிகளாக இருந்திருப்பீர்களானால் நான் உங்களைத் தண்டித்திருப்பேன் என்றார்கள்.

ஹஸரத் உமர் பாரூக் (ரலி) அவர்கள் ஆதாரம் : ஹஸரத் ஸாயிபுபின்யஸீது - புகாரி

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அல்லாஹ்வை வழிபடுவதற்காக மஸ்ஜிதை நோக்கிச் செல்லும் சமயங்களில் அழகிய ஆடை அணிந்து உள்ளத்தையள்ளும் நறுமண வாடை கமகமவென்று வீச, இதய குதூகலத்துடன் காட்சி தருவார்கள்.ஜும்ஆவுக்காகவென்று இரு ஆடைகளைத் தனியே ஒதுக்கிவைப்பது நன்று. (நபிமொழி - இப்னுமாஜா)

குறிப்பு :-

தலையை மறைக்காது தொழும் பழக்கம் மட்டகரமானது. ஆதலால் அது விரும்பத்தக்கது அல்ல என்பது ஒரு புறமிருக்க மண்ணுக்கும் விண்ணுக்கும் அதிபதியான அல்லாஹ்வின் உயர்திரு சன்னிதியில் இத்தகைய அலட்சிய போக்கு சன்மார்க்கத்துக்கு இழைக்கும் இல்ட்சியமற்ற போக்காக அமைகின்றது. ஒழுங்கீனத்துக்கும் அது அத்திவாரமாகவும் அமையலாம் என்பது வெளிப்படை.

***

குத்பா

சொற்பொழிவு என்று பொருள்படும் இப்பேருரை பள்ளியிலுள்ள மிம்பர் மீது ஏறி வெள்ளிக்கிழமையன்றும் இரண்டு பெருநாள் தொழுகைகளின் போதும் சூரிய, சந்திர கிரகணத்தொழுகையின் போதும் மழைத் தொழுகையின் போதும் நிகழ்த்தப்பெறும். வெள்ளிக்கிழமையன்று ஜும்ஆத் தொழுகைக்கு முன்பும் மற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகைகளில் தொழுகைக்குப் பின்பும் இது நிகழ்த்தப் பெறுகிறது. திருமணத்தின் போது திருமணத்தைப் பற்றி நிகழ்த்தப்படும் பேருரைக்கும் குத்பா என்றே சொல்லப்படும்.

ஜும்ஆத் தொழுகைக்கு முன் குத்பா ஓதப்பெறுவதற்கு இறைவன் தன் திருமறையில் " எனவே, தொழுகை நிறைவேற்றப்பட்டால் பூமியில் பரவுங்கள்". இன்னும் அல்லாஹ்வின் அருளில் நின்றும் தேடுங்கள் (குர்ஆன் 62:10) என்று கூறி தொழுது முடிந்ததும் வெளியே சென்று அல்லாஹ்வின் நிறையருளைத் தேடுமாறு கூறியிருப்பது ஒரு காரணம் என்று சொல்லலாம்.

ஜும்ஆ குத்பா பற்றிய விதிகள்: ஷாபி மதுஹபின் படி எட்டு பர்ளுகளும் எட்டு ஷர்த்துகளும் குத்பாவில் பின்பற்றப்பட வேண்டும். எட்டு பர்ளுகளும் வருமாறு :-

1 அல்ஹம்துலில்லாஹ் கூறுதல். 2 சலவாத்துக் கூறுதல்.

3 இத்தகுல்லாஹ் என்று கூறி அல்லாஹ்வுக்குப் பயப்படுமாறு ஏவுதல். இவை மூன்றும் இரண்டு குத்பாக்களிலும் கூறப்படும் பொழுது ஆறு ஆகிவிடுகிறது.

7 எச்சரிக்கை செய்யும் திருமறை வசனம் ஒன்றை ஓதுதல்.

8 எல்லா இறை நம்பிக்கையாளர் (மு.'.மின்) களுக்கும் அல்லாஹ்விடம் துஆக்கேட்டல்

எட்டு சர்த்துகள் (நிபந்தனைகள்) வருமாறு :-

1 மேலே கூறப்பட்ட எட்டு பர்ளுகளும் கூடியிருக்கும் மக்களுக்குக் கேட்கும் வண்ணம் சொல்லப்பட வேண்டும்.

2 அந்த எட்டு பர்ளுகளும் அரபியில் கூறப்பெற வேண்டும்.

3 கதீப் நின்று கொண்டு பேருரை ஆற்ற இயன்றால் நின்று கொண்டே பேருரை ஆற்ற வெண்டும்.

4 அவர் சிறு தொடக்கு பெருந்தொடக்கு நீக்கியவராகவும் இருப்பதோடு அவரின் உடலிலோ, உடையிலோ நஜீஸ் ஒட்டிக்கொண்டிருக்கவும் கூடாது.

5 அவருடைய அவ்ரத் மறைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6 இரண்டு குத்பாக்களுக்குமிடையில் சிறிது நேரம் அமர்ந்து இருக்க வேண்டும்.

7 எவ்விதத் தடங்களுமின்றி அவர் பேருரை நிகழ்த்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 குத்பா முடிந்ததும் தாமதியாது இகாமத் சொல்லப்பட்டு உடனே தொழுகை துவங்கப் பெற வேண்டும்.

மூன்றாவது பர்ளாகிய தக்வா பற்றி வசிய்யத் செய்வதும் சலவாத்தில் சல்லல்லாஹு அலாமுஹம்மதின் அல்லது அல்லாஹும்ம சல்லிஅலா முஹம்மதின் என்று முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் என்று பெயர் குறிப்பிட்டு இரண்டு குத்பாக்களிலும் ஓதுவது கடமையாகும்.

முஹம்மது என்று பெயரின்றி "ஸல்லல்லாஹு அலைஹி" என்று ஓதினாலும் கூட ஷாபி மதுஹபியினருக்கு ஜும்ஆக் கூடாது போய் விடும். எனவே கதீப்மார்கள் இவைப்பற்றிப் பேணுதலாக நடந்து கொள்ள வேண்டும்.

ஜும்ஆ குத்பா பற்றிய விதிகள் ஹனபி மதுஹபின் சட்டங்கள்:

1 ஜுமுஆ வாஜிபாக ஓதப் பெற வேண்டும். ஜும்ஆத் தொழுகைக்கு முன் குத்பா ஓதப் பெற வேண்டும். குத்பா ஓதுமுன் அதான் சொல்ல வேண்டும்.

2 ஆண்கள் தாம் குத்பா ஓத வேண்டும்.

3 குத்பா ஓதுபவர் தலைப்பாகை அணிந்திருக்க வேண்டும்.

4 அவர் தம் கையில் ஒரு வாள் அல்லது கோல் போன்ற ஒன்றையோ வைத்துக் கொண்டிருப்பது சுன்னத் (நபியின் வழிமுறை) ஆகும்.

5 அவர் வுலுவுடன் இருப்பது சுன்னத்.

6 அவர் மெதுவாக அஊது சொல்லிக் கொள்ள வேண்டும்.

7 அவர் குத்பாவை பிஸ்மிலுடன் துவங்கக் கூடாது. அவ்விதம் செய்வது பித்அத் ஆகும்.

8 அவர் பிம்பர் மீதோ உயரமான மேடை மீதோ நின்று கொண்டே குத்பாப் பேருரை நிகழ்த்த வேண்டும். உட்கார்ந்து நிகழ்த்துவது மக்ருஹ் ஆகும்.

9 அவர் குத்பாப் பேருரை நிகழ்த்தும் பொழுது வலப்புறமும் இடப்புறமும் திரும்புவது பிதுஅத்தாகும்.

10 குத்பாவில் அம்மா ப∴து என்ற சொற்றொடரைக் கூறுவது சுன்னத்தாகும்.

11 முதலாவது குத்பாப் பேருரையில் தனாவும், கலிமா ஷஹாதத்தும், சலவாத்தும், அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்குமாறு அறிவுறுத்துவதும், பொதுவாக அறிவுரைகளும் இறுதியாககுர்ஆனின் திருவசனங்களும் அடங்கியிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 இரண்டாவது குத்பாவில் தனா கலிமா ஷஹாதத்து, சலவாத்து அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்குமாறு கூறும் அறிவுரை ஆகியவற்றை கூறிய பின், ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் துஆக் கேட்க வேண்டும்.

13 இரண்டாவது குத்பாவில் நாற்பெரும் கலீபாக்கள். பாத்திமா (ரழி) அவர்கள், ஹஸன் (ரழி) அவர்கள், ஹுஸைன் (ரழி) அவர்கள், அப்பாஸ் (ரழி) அவர்கள் ஆகியோரைப்பற்றிக் குறிப்பிடுவது முன்னோரின் வழக்கமாக உள்ளது.

14 இரண்டு குத்பாக்களும் சுருக்கமாக இருக்க வேண்டும். அத்த ஹையாத்தை விட குறைவாக இருக்கக் கூடாது. எனினும், அல்ஹம்துலில்லாஹ் என்றோ லாஇலாஹா இல்லல்லாஹ் என்றோ ஒரு முறை கூறினாலும் குத்பா நிறைவேறி விடும்.

15 முதல் குத்பாவுக்கும் இரண்டாவது குத்பாவுக்கும் இடையில் மூன்று ஆயத்துக்களை ஓதும் நேர அளவு குத்பா ஓதுபவர் மேடை மீது (பிம்பரில்) அமர்ந்திருப்பது நபியின் வழிமுறையாகும்.

16 தாம் ஆற்றும் குத்பாப் பேருரையைக் கேட்க மக்கள் இல்லாத போது கதீப் தாம் மட்டும் (பிம்பர் மீது) மேடை மீதேறி குத்பாப் பேருரை நிகழ்த்தக் கூடாது. குறைந்த அளவு எவ்வளவு பேர் இருக்க வேண்டும் என்பது பற்றி இமாம்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. கதீப் குத்பாப் பேருரை நிகழ்த்திய பின் போதுமான மக்கள் ஜும்ஆத் தொழுகையில் கலந்து கொண்டால் அவர்களுக்கு குத்பாவும் நிறைவேறாது. ஜும்ஆத் தொழுகையும் நிறைவேறாது.

17 குத்பாப் பேருரை நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது தொழக் கூடாது.

18 அப்பொழுது எந்தப் பேச்சும் பேசக் கூடாது.

19 தொழும் பொழுது செய்யக் கூடாத அத்தனை செயல்களையும் குத்பாப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது செய்யக் கூடாது.

20 குத்பாப் பேருரை முடிவுற்றதும் தொழுகைக்கான இகாமத் சொல்ல வேண்டும். சுணங்குவது மக்ரூஹ் ஆகும்.

21 குத்பாவுக்கும் ஜும்ஆவுக்கும் இடையில் வேறு எச்செயலும் ஆற்றக் கூடாது. அப்படி ஏதும் செயலாற்றினால் குத்பா முறிந்து விடும். அப்பொழுது திரும்பவும் அதனை ஓதுவது வாஜிபு.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் தொகுப்பு

பருவமடைந்த ஒவ்வோர் ஆண்கள் மீதும் ஜும்ஆவுடைய குளிப்பு கடமையாகும். அன்றி அவர் மிஸ்வாக் செய்து நறுமணப் பொருள் இருப்பின் அதையும் பூசிக் கொள்ளவும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஸஈதுல் குத்ரீ (ரலி) அவர்கள்.

ஆதாரம் : புகாரீ, முஸ்லிம், முஅத்தா, அபூதாவூத், நஸஈ

பருவமடைந்த ஒவ்வோர் ஆணின் மீதும் முழுக் குளிப்பைப் போன்று ஜும்ஆ குளிப்பும் கடமையாகும் என்று அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்.அறிவிப்பவரும் அவரே !

ஆதாரம் - முஅத்தா.

(இது ஹனபி மதுஹபுக்கு உரியது) ஷாபி மதுஹபுக்காரர்கள் ஜும்ஆக்குளி சுன்னத்தாகும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்களே இந்த நாளை அல்லாஹ் பெருநாளாக ஆக்கி இருக்கிறான். எனவே, நீங்கள் குளித்து வாருங்கள். அன்றி எவரிடம் நறுமணப் பொருள் இருக்கின்றதோ அவர் அதனைப் பூசிக் கொள்ள அவருக்கு யாதொன்றும் தடையாக இருக்க வேண்டாம். மேலும் மிஸ்வாக் செய்வதையும் உங்கள் மீது கடமையாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினர்.

அறிவிப்பவர் - ஸபாக் (ரலி) அவர்கள் ஆதாரம் - முஅத்தா

வெள்ளிக்கிழமை அன்று உங்களில் எவரும் வீட்டில் அமர்ந்துவிட்டு இமாம் பிம்பர் மீது ஏறி நின்று குத்பாப் பேருரை நிகழ்த்தும் பொழுது மக்களின் பிடரியைப் பதற்றத்துடன் தாண்டித் தொழச் செல்வதைவிட அவர் (பின்னிருந்து) சுடுகின்ற தரையில் தொழுவது அவருக்கு மிகவும் மேலாக இருக்கும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். -

அபூஹுரைரா (ரலி) ஆதாரம் - முஅத்தா

எவர் வெள்ளிக்கிழமை அன்று மக்கள் பிடரியைப் பதற்றத்துடன் தாண்டிச் செல்கிறாரோ அவரை நரகத்தின் பாலமாக்கப்பட்டுவிடும் என்று நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

ஆதாரம் - முஆதுப்னு அனஸ் (ரலி) ஆதாரம் - திர்மிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களில் எவரும் தம் (இஸ்லாமிய) சகோதரரை வெள்ளிக்கிழமை அன்று (அவர் அமர்ந்து இருந்த இடத்தை விட்டு) எழுந்திருக்கச் செய்து பின்னர் அங்கு சென்று அ(வ்விடத்)தில் அமர வேண்டாம் என்றும் (இடமில்லாதிருப்பின்) இடத்தை விசாலப்படுத்துங்கள் என்றும் கூறுக: என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினர்.அறிவிப்பவர் - ஜாபிர் (ரலி)

ஒருவர் மற்றவரை அவருடைய இருப்பிடத்திலிருந்து எழுப்பி அ(வ்விடத்)தில் அவர் அமர்வதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தடை செய்தனர் என இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன். ஜும்ஆவிலா என்று என்னிடம் கேட்கப்பட்டதற்கு (ஆம்) ஜும்ஆவிலும் அஃதல்லாத (எல்லா நேரத்திலும் இடத்) திலும் தான் என்று கூறினேன்.

அறிவிப்பவர் - நபிஃ (ரழி) ஆதாரம் - புகாரி முஸ்லிம்

வெள்ளிக்கிழமை அன்று இமாம் குத்பாப் பேருரை நிகழ்த்தும் பொழுது முழங்காலைக் கட்டிக் கொண்டு (எவரும்) அமர்ந்திருப்பதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தடை செய்தனர். அறிவிப்பவர் - முஆதுப்னு அனஸ் (ரலி)

ஆதாரம் - அபூதாவுத் - திர்மிதி

உங்களில் வெள்ளிக்கிழமை அன்று (குத்பாப் பேருரை நிகழ்த்தும் பொழுது உறக்கம் மேலிட்டு) தூங்கி விழுந்தால் அவர் தாம் இருந்த இடத்திலிருந்து எழுந்த மற்ற இடத்தில் மாறி அமர்ந்து கொள்ளவும் என்று நபிமணி (ஸல்) அவர்கள் நவின்றனர்.அறிவிப்பவர் - இப்னு உமர் (ரலி) ஆதாரம் - திர்மிதி

எவர் வெள்ளிக்கிழமை அன்று முழுக்குளியலை குளித்து பின்னர் முன் நாழிகையில் ஜும்ஆவிற்கு பள்ளிக்குச் செல்கிறாரோ அவர் ஓர் ஒட்டகத்தைக் குர்பாணி கொடுத்தவர் போலாவார். அன்றி, அவர் மறு நாழிகையில் செல்கிறாரோ, அவர் ஒரு மாட்டைக் குர்பாணி கொடுத்தவர் போலாவார் தவிர எவர் மூன்றாவது நாழிகையில் செல்கிறாரோ அவர் ஓர் ஆட்டைக் குர்பாணி கொடுத்தவர் போலாவார். மேலும் எவர் நான்காவது நாழிகையில் செல்கிறாரோ அவர் ஒரு கோழியைக் குர்பாணி கொடுத்தவர் போலாவார். பின்னும் எவர் ஐந்தாவது நாழிகையில் செல்கிறாரோ அவர் ஒரு முட்டையைக் குர்பாணி கொடுத்தவர் போலாவார். இமாம் குத்பா ஓதப் புறப்பட்டு விடின் மலக்குகள் பிரசன்னமாகி குத்பாவைச் செவியுறுவர். என்று அண்ணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்)அவர்கள் அருளினார்கள்.அறிவிப்பவர் - அபூஹுரைரா (ரலி)
ஆதாரம் - புகாரி முஸ்லிம் முஅத்தா, அபூதாவூத் - திர்மிதி - நஸஈ

மற்றோர் அறிவிப்பில் வெள்ளிக்கிழமை வந்துவிடின் வானவர்கள் பள்ளியின் வாயல்களில் எல்லா வாசல்களிலும் வந்திருந்து முதலில் வருபவரையும் அடுத்தடுத்து வருபவரையும் எழுதி வருகின்றனர். இமாம் பிம்பர் மீது ஏறி அமர்ந்து விடின் வானவர்கள் ஓலையை மடக்கிக் கொண்டு குத்பாவைச் செவியுற வந்து விடுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எவர் குளித்து (தம் மனைவியையும் குளிக்கச் செய்து முன் நாழிகையில் பள்ளியை அடைந்து குத்பாவைத் துவக்கத்திலிருந்து செவியுற வாகனத்தில் ஏறாமல் நடந்தே சென்று இமாமை அடுத்திருந்து வீண் பேச்சுப் பேசாது காது தாழ்த்தித் குத்பாவைக் கேட்கிறாரோ அவருடைய ஒவ்வொரு அடிக்கும் ஓர் ஆண்டு பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் நின்று தொழுத பலன் உண்டு. என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் - அவ்ஸுப்னு அவ்ஸில் ஸகஃபி (ரலி)
ஆதாரம் - ஸுனன்

குளித்து குளிக்கச் செய்வது என்பது பற்றி மக்ஹுல் அவர்களிடம் வினவப்பட்டதற்கு அவர்கள் இதன் பொருள் ஒருவர் தம் தலையையும் உடலையும் கழுவித் துப்புரவு செய்வதாகும் என்று எடுத்துரைத்தனர். இவ்வாறே ஸஈதுப்னு அப்துல் அஸீஸ் அவர்களும் கூறினர். அதாவது முதல் குளியல் ஒருவர் தம் மனைவியுடன் மருவி அவளையும் குளிக்கும் அவசியத்துக்குள்ளாக்குவது. இதனால் அவர் ஜும்ஆவிற்குச் செல்லும் சமயம் தீய எண்ணத்துடன் எவளையும் பார்க்காமலிருக்க இது ஏதுவாக இருக்கும். இரண்டாவது குளியல் அவர் தம் மனைவியுடன் மருவிய பின் தாமும் குளிப்பதாகும். மேலும் சிலர் முன்னையது பரிபூரணமாக வுலுச்செய்வது என்றும் பின்னையது ஜும்ஆவிற்காக குளிப்பது என்றும் எடுத்துரைக்கின்றனர் என அபூதாவூதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜும்ஆவில் மூன்று வகையானவர் வருகின்றனர்.

1 ஒரு வகையானவர் அங்கு பிரசன்னமாகி வீண் பேச்சில் ஈடுபடுகின்றனர். அதில் இதுவே அவருக்குரிய பங்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 இன்னும் ஒரு வகையானவர் அங்கு இறைஞ்சுவதற்காகப் பிரசன்னமாகின்றனர். எனவே இவர் அல்லாஹ்விடம் இறைஞ்சுகின்றார். ஆனால் அவன் நாடினால் அதனை அவருக்கு அளிக்கின்றான். அன்றி, அவன் நாடினால் அதனை அவருக்குத் தடுத்து விடுகின்றான்.

3 மற்றும் ஒரு வகையானவர் அங்கு வந்து வாய் பொத்தி மௌனமாக இருந்து அணியிலுள்ள எந்த முஸ்லிமுடைய பிடரியையும் தாண்டிச் செல்லாமலும் அன்றி எவருக்கும் தீமை செய்யாமலும் இருப்பவராவர். எனவே, இவ்விதமாக இருந்து ஜும்ஆவைத் தொழுது முடிப்பது மறு ஜும்ஆ வரை அவருக்கு அவர் செய்யும் சிறு பாவத்திற்குப் பரிகாரமாகும்.

எவர் ஒரு நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதைப் போன்று பத்து மடங்கு நன்மைகள் உண்டு என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் - இப்னு அம்ருப்னுல் ஆஸ் (ரலி) ஆதாரம் - அபூதாவூது

வெள்ளிக்கிழமை வருமாயின் காலையில் ஷைத்தான்கள் தங்களின் கொடிகளை எடுத்துக் கொண்டு கடைத் தெருக்களுக்குச் சென்று மக்களை மற்ற அலுவல்களில் ஈடுபடச் செய்து ஜும்ஆவிற்கு வராது அவர்களைத் தடுத்து விடுகின்றனர். அன்றி, வானவர்கள் காலையிலிருந்து பள்ளியின் வாயல்களில் அமர்ந்து வருகின்றவர்களைக் குறிக்கத் தொடங்கிவிடுகின்றனர்.

இன்னான் முதல் நாழிகையில், இன்னான் இரண்டாவது நாழிகையில் இவ்விதமாக இமாம் புறப்படும் வரை மேலும் எவர் குத்பாவைச் செவியுறவும் இமாமை நோக்கவும் வசதியான இடத்தில் அமர்ந்து வாய் பொத்தி வீண் பேச்சுக்களில் ஈடுபடவுமில்லையோ அவருக்கு ஒரு பங்கு நன்மை இருக்கின்றது. ஆனால், அவர் குத்பாவைச் செவியுறவும், இமாமை நோக்கவும் வசதியான இடத்தில் அமர்ந்து வீண் பேச்சுக்களில் ஈடுபட்டு வாய் பொத்தி இராவிடின் அவருக்கு இரு மடங்கு பாவங்கள் உண்டு. அன்றி, அவர் குத்பா செவியில் படாமலும் இமாமை நோக்கவும் வசதியற்ற இடத்தில் அமர்ந்து (வீண் பேச்சில் ஈடுபட்டு) வாய் பொத்தி இராவிடின் அவருக்க ஒரு பங்கு பாவம் உண்டு. தவிர, எவர் தம்மை அடுத்திருப்பவரிடம் வெள்ளிக்கிழமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குத்பா ஓதும் பொழுது) "வாய் பொத்தும்" என்று கூறுகின்றாரோ அவர் நிச்சயமாக வீண் பேச்சுப் பேசியவராவார். அன்றி, எவர் வீண் பேச்சுப் பேசுகின்றாறோ அவருக்கு ஜும்ஆ (வில் யாதொரு பலனும்) இல்லை என்று கூபாவின் மிம்பர் (மேடை) மீது இருந்த வண்ணம் அலீ (ரலி) அவர்கள் குத்பாப் பேருரை நிகழ்த்தி இறுதியாக " இதனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன்" என்று எடுத்துரைத்தனர்.
அறிவிப்பவரும் அவர்களே ஆதாரம் - அபூதாவூத்

ஜும்ஆத் தொழுகை ஒவ்வொரு முஸ்லிம் மீதும் ஜமாஅத்தாகத் தொழ கடமையாகும். நால்வரைத் தவிர்த்து, அவர்கள்-
(1) அடிமை (2) பெண் (3) சிறுவர் (4) நோயாளர் ஆகியோராவர் என்று நபி (ஸல்) அவர்கள் அருளினர்.
அறிவிப்பவர் - தாரிக் இப்னு ஷிஹாப் (ரழி) ஆதாரம் - அபூதாவூத்

பருவமடைந்த ஆண்கள் அனைவர் மீதும் ஜும்ஆ கடமையாகும். அன்றி ஜும்ஆவிற்குச் செல்லும் அனைவர் மீதும் குளிப்பு கடமையாகும்.
அறிவிப்பவர் - ஹப்ஸா நாயகி ரலியல்லாஹுா அன்ஹா
ஆதாரம் - அபூதாவுத் - நஸாஈ

எவர் ஜும்ஆத் தொழுகையில் ஒரு ரக அத்தை அடைந்து விடுகிறாரோ அவர் நிச்சயமாக ஜும்ஆவை அடைந்தவராவர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார் (இது ஹனபி மதுஹபுக்குரியவர்களுக்கு)
அறிவிப்பவர் - அபூஹுரைரா (ரலி) ஆதாரம் - நஸாஈ

எவர் மூன்று ஜும்ஆக்களை (யாதொரு நோயுமின்றி) சோம்பலாக விட்டு விடுகிறாரோ அவருடைய மனதில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறான் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
ஆறிவிப்பவர் :- அபூஜ.'.தல் ளமீரிய்யி ஆதாரம் :- ஸுு னன்

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் உமர் (ரழி) அவர்கள் ஆகியோரின் காலத்தில் வெள்ளிக்கிழமையன்று முதல் அழைப்பு (பாங்கு) இமாம் மிம்பர் மீது ஏறி அமர்ந்த பொழுது இருந்து வந்தது. இரண்டாவது அழைப்பது தொழுகைக்கு முன் கூறப்படும் இகாமத்தாக இருந்தது. உதுமான் (ரழி) அவர்கள் காலம் வந்த பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அதிகரித்தனர். எனவே அவர்கள் மூன்றாவது அழைப்பை ஜவ்ரா எனும் இடத்தில் அதிகப்படுத்தினர். இதன் படியே இன்று வரை நிலை பெற்று விட்டது.
அறிவிப்பவர் :- ஸாயிப் இப்னு யஜீது
ஆதாரம் :- புகாரி, அபூதாவூத், திர்மிதி, நஸயி

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இரண்டு குத்பாக்களை நிகழ்த்தி வந்தனர். அவர்கள் மிம்பர் மீது ஏறியதும் முஅத்தின் பாங்கு கூறி முடிக்கும் வரை அமர்ந்திருந்தனர். பின்னர் நின்று குத்பா ஓதிய பின் அமர்ந்து விடுவர். ஆனால் பேச மாட்டார்கள். மீண்டும் நின்று குத்பா ஓதுவர்.
அறிவிப்பவர் :- இப்னு உமர் (ரழி)
ஆதாரம் :- புகாரி, முஸ்லிம், அபூதாவுத், திர்மிதி, நஸயி

இது அபூதாவூதிலுள்ள வாசகமாகும். நஸாயியிலுள்ள அறிவிப்பில் அண்ணல் நபி (ஸல்) நின்று இரு குத்பாக்கள் ஓதி வந்தனர். அன்றி அவ்விரண்டுக்கும் இடையில் அமர்ந்து பிரிவினை செய்து (அதாவது குத்பாவை இரண்டாகச் செய்து) வந்தனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா பேருரை நிகழ்த்தும் பொழுது அவர்கள் இரு கண்களும் சிவந்தன. அவர்களின் குரலும் உச்சஸ்தானத்தில் வந்து விடும். அவர்களின் சினமும் அதிகரித்து விடும். உங்கள் முன்பு காலையிலோ மாலையிலோ திரட்டப்பட்டு வரவிருக்கும் படையைப் பற்றி எச்சரிப்பவர் போன்று ஆகிவிடுவர். அன்றி அவர்கள் நானும் மறுமையும் இவ்விதமாக அனுப்பப்பட்டிருக்கிறோம் என்று கூறி கலிமா விரலையும் நடுவிரலையும் இணைத்து காட்டிவிட்டு மேலும் அவர்கள் அல்லாஹ்வைத் துதித்து விட்டுக் கூறினர். "அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக செய்திகளில் மிகவும் மேலானது அல்லாஹ்வின் திருமறையாகும். நேர்வழியில் மிகவும் மேலானது முஹம்மது (ஸல்) அவர்களுடைய வழியாகும். மேலும் செயல்களில் மிகவும் தீயவை அவற்றின் புதுமைகளாகும். புதுமைகள் அனைத்தும் வழிகேடேயாம்"
அறிவிப்பவர் :- ஜாபிர் (ரலி) ஆதாரம்:- முஸ்லிம் - நஸயீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா பேருரை நிகழ்த்துவதற்கு முன் இதனை ஓதி வந்தனர். "புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே நாங்கள் அவனிடமே உதவி கோருகிறோம். அவனிடமே பிழை பொறுக்கவும் வேண்டுகிறோம். நாங்கள் எங்களின் உள்ளங்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் கோருகிறோம். எவரை அல்லாஹ் நேர் வழியில் செலுத்தி விட்டானோ அவரை எவரும் வழிகெடுக்க இயலாது. அன்றி எவரை அல்லாஹ் வழி கெடுத்து விட்டானோ அவரை எவரும் நேர்வழிப்படுத்த இயலாது. வணக்கத்துக்குரிய அல்லாஹ்வைத் தவிர எவனுமில்லை என்று நான் சான்று பகர்கின்றேன். அன்றி, நிச்சயமாக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமானவர் என்றும் நான் சான்று பகர்கின்றேன். அவன் அவரை மறுமைக்கு முன்னர் உண்மை நபியாகவும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்ச மூட்டுபவராகவும் அனுப்பி வைத்தான். எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு நடக்கின்றாரோ அவர் நிச்சயமாக நேர்வழியை அடைந்தவராவார். அன்றி எவர் அவ்விருவருக்கும் மாறுபடுகின்றாரோ அவர் தமக்கே தீமை செய்து கொள்கிறார். (அவரால்) அல்லாஹ்வுக்கு யாதும் தீமை இழைத்து விட இயலாது" என்று கூறினர்.

அறிவிப்பவர் :- இப்னுமஸ்ஊத் (ரழி) ஆதாரம்:- அபூதாவூத்

(மற்றோர் அறிவிப்பில், வெள்ளிக்கிழமையன்று குத்பாப் பேருரை நிகழ்த்தும் முன் என்று துவங்கி மேற்படி ஹதீஸ் குறிப்பிட்டபட்டிருக்கின்றது.)

நபிமணி (ஸல்) அவர்களின் தொழுகையும், அவர்களின் குத்பாப் பேருரையும் நடுத்தரமாகவே இருந்து வந்தன.

அறிவிப்பவர் :- ஜாபிர் இப்னு ஸமுரா (ரழி)
ஆதாரம் :- முஸ்லிம், அபூதாவுத் திர்மிதி - நஸயீ

அம்மார் (ரழி) அவர்கள் எங்களுக்குக் குத்பாப் பேருரை நிகழ்த்தினர். அப்பொழுது அவர்கள் அதனை மிகவும் சுருக்கமாகவும் ஆனால் பொருள் நிறைந்ததாகவும் நிகழ்த்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவர்கள் மேடையிலிருந்து இறங்கிய பொழுது நாங்கள் அவர்களை அணுகி "யக்ளானின் தந்தையே ! நிச்சயமாக நீங்கள் கருத்து நிறைந்த பேருரை நிகழ்த்தினீர்கள் எனினும் மிகவும் சுருக்கி விட்டீர்கள். இன்னும் சிறிது நேரம் நிகழ்த்தியிருப்பின் நன்றாயிருக்கும்" என்று கூறினோம். அதற்கு அவர்கள் "நிச்சயமாக ஒருவர் ஜும்ஆத் தொழுகையை நேரப்படத் தொழுவதும் ஆனால் குத்பா பேருரையைச் சுருக்கமாக நிகழ்த்துவதும் அவர் மார்க்க ஞானத்தில் மிகவும் வல்லவர் என்பதற்கு அடையாளமாகும் என்றும் எனவே நீங்கள் குத்பாப் பேருரையைச் சுருக்கமாக்கிக் கொண்டு ஜும்ஆத் தொழுகையை அதைவிட சற்று நேரப்படச் செய்யவும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்" என்று கூறினர்.

அறிவிப்பவர் :-அபூவாயில் (ரழி) ஆதாரம்:- முஸ்லிம் - அபூதாவூத்

"இரண்டாம் கலிமா ஓதப் பெறாத குத்பாப் பேருரை அனைத்தும் கையற்ற முண்டம் போன்றதேயாகும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் :- அபூஹுரைரா (ரழி)

ஆதாரம் :- அபூதாவூத் - திர்மிதி

(அபூதாவூதிலுள்ள மற்றோர் அறிவிப்பில் "அல்லாஹ்வின் பெயர் துவக்கப் பெறாத எநதப்பேச்சும் துண்டிக்கப்பட்டதாகும். (கை துண்டிக்கப்பட்டது போன்று)" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குத்பாப் பேருரைக்குப் பிரசன்னமாகுங்கள். அன்றி இமாமுக்கு அருகிலும் இருங்கள். ஏனெனில், நிச்சயமாக மனிதன் எப்பொழுதும் பின் இருந்தும் பின் இருந்து சுவனம் செல்வதிலும் தாமதிப்பான். எனினும், அதில் அவன் நுழைந்து விடக் கூடியவனாயினும் சரியே ! என்று நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்:- ஸமுரதுப்னு ஜுன்துப் (ரலி) ஆதாரம் :-அபூதாவூத்

வெள்ளிக்கிழமை தான் ஆதி பிதா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் ஹவ்வா (அலை) அவர்களுக்கும் வானவர் சாட்சியாகத் திருமணம் நிகழ்த்தித் திருமண குத்பாவை முதலாவதாக அல்லாஹ்வே ஓதினான். வெள்ளிக்கிழமை யூசுப் (அலை) அவர்களுக்கும், சுலைஹா (அலை) அவர்களுக்கும், மூஸா (அலை) அவர்களுக்கும், ஸபூரா (அலை) அவர்களுக்கும்,சுலைமான்(அலை)அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கிஸ் (அலை) அவர்களுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் கதிஜா (ரலி) , ஆயிஷா (ரலி) ஆகியோருக்கும் அலி (ரலி) அவர்களுக்கும், பாத்திமா (ரலி) அவர்களுக்கும் திருமணங்கள் நிகழ்ந்தன.

அல்லாஹ்வின் பேரருளும், பேருதவியும் வெள்ளிக்கிழமையன்றே சில நபிமார்களுக்கு கிடைத்துள்ளன.

நபி நூஹ் (அலை) அவர்களது கப்பல் கரை சேர்ந்தது ஒரு வெள்ளிக்கிழமை தான்.

பன்னெடும் காலத்திற்குப்பின் ய.்.கூப் (அலை) அவர்களும், யூசுப் (அலை) அவர்களும் சந்தித்து மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தது ஒரு வெள்ளிக்கிழமையில் தான்.

நபி மூஸா (அலை) அவர்கள் பிர் அவ்னின் கொடும் பிடியிலிருந்து மீட்சி பெற்றதும் ஒரு வெள்ளிக்கிழமையில் தான்.

நபி யூனுஸ் (அலை) அவர்கள் மீனின் வாயிற்றிலிருந்து வெளியேறி உயிர் காக்கப்பெற்றதும் ஒரு வெள்ளிக்கிழமையில் தான்.

ஒரு நாள் மூஸா (அலை) அவர்கள் பைத்துல் முகத்தஸின் அண்மையிலுள்ள குன்றின் அருகே சென்ற பொழுது அங்கு சிலர் வீற்றிருந்து இறை தியானத்தில் மூழ்கி இருப்பதைக் கண்டு வியப்புற்று "நீங்கள் யார்?" என்று வினவினார்கள். "தங்களின் உம்மத்துத்தான்" என்று பதில் மொழிந்தார்கள் அவர்கள். "அப்படியா! நீங்கள் இங்கு எவ்வளவு காலமாக இருந்து வருகின்றீர்கள்" என்று வினவினர் மூஸா (அலை) அவர்கள். "எழுபது ஆண்டுகளாக" என்றார்கள். "அவ்விதமாயின் உணவு, உடை ஆகியவற்றிற்கு என்ன செய்கின்றீர்கள் ?" என்றார்கள் மூஸா (அலை) அவர்கள். அதற்கு அவர்கள் "பொறுமை எங்களின் ஆடை, இலை, தழை, பூண்டுகள் எங்களின் உணவு, மழைநீர் எங்களின் பானம்" என்று பதில் கூறினார்கள். அது கேட்டு தம் உம்மத்தினர் பற்றி ஒரு விதப்பெருமித உணர்வு மூஸா (அலை) அவர்களின் உள்ளத்தில் தளிர்விட்டது. அப்பொழுது அல்லாஹ் மூஸா (அலை) அவர்களை நோக்கி "மூஸாவே (அலை) பெருமை கொள்ள வேண்டாம். என் இறுதித் தூதராக நான் அவனிக்கு அனுப்பும் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்துக்கு நான் ஒரு நாளை அன்பளிப்புச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வேன். அந்நாளில் அவர்கள் இரண்டு ரகஅத் தொழுவது உம்முடைய இந்த உம்மத்துக்கள் செய்த எழுபதாண்டு வணக்கத்தை விட மாண்புடையதாகும்" என்று கூறினான். "அது எந்த நாள்" என்று மூஸா (அலை) அவர்கள் வினவ "அது வெள்ளிக்கிழமை" என்று பதில் மொழிந்தான் அல்லாஹ்.

"அதனை எங்களுக்கு ஜும்ஆ நாளாகத் தந்தருள்" என்று மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வை வேண்டினர். அதற்கு அல்லாஹ், "இல்லை ஒவ்வொரு நபிக்கும் ஒரு நாளை ஜும்ஆ நாளாக கொடுத்துள்ளேன். நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு - சனிக்கிழமையும் நபி ஈஸா (அலை) அவர்களுக்கு - ஞாயிற்றுக்கிழமையும் நபி இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு - திங்கட்கிழமையும் நபி ஜகரியா (அலை) அவர்களுக்கு - செவ்வாய்க்கிழமையும் நபி யஹ்யா (அலை) அவர்களுக்கு - புதன்கிழமையும் நபி ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களுக்கு - வியாழக்கிழமையும் நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கு - வெள்ளிக்கிழமையும் ஜும்ஆ நாட்களாக என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன."

இவ்வாறு கூறிய அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்துகளுக்கு தான் அளிக்கவிருக்கும் அளப்பெரும் நன்மைகளை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துரைத்தான். அது கேட்ட மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வை நோக்கி "அல்லாஹ் ! நீ எனக்கு ஜும்ஆ நாளாகத் தராத போதிலும் பாதகமில்லை. என்னை இறுதி நபியின் உம்மத்தாகவாவது ஆக்குவாயாக" என்று கேட்டார்கள். அப்பொழுது அல்லாஹ் பெரிதும் கழிவிரக்கத்துடன் "மூஸாவே நான் உம்மை என்னுடைய தூதராக அனுப்பி தௌராத் என்ற வேதத்தையும் உமக்கு வழங்கியுள்ளேன். அப்படியிருக்க உம்மை எவ்வாறு ஒரு சாதாரணமான உம்மத்தாகப் படைப்பது ?" என்று ஆறுதல் கூறினான். நபி மூஸா (அலை) அவர்கள் அமைதியுற்றார்கள்.

வெள்ளி இரவு புனித ரமழான் மாதத்தில் வரும் லைலத்துல் கத்ர் இரவைவிடச் சில காரணங்களால் மாண்புடையது என்று பெரியோர்கள் சிலர் கூறுகின்றனர். காரணம் அது திரும்பத் திரும்ப அதிகமாக வருவதேயாகும் என்று முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜிலானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜும்ஆத் தொழுகையை விடுபவர்களைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறும் பொழுது "என்னுடைய இடத்தில் வேறொருவரை இமாமாக நிறுத்தி விட்டு ஜும்ஆத் தொழுகைக்கு வராதவர்களின் இல்லங்களை நெருப்பிட்டுச் சாம்பலாக்கி விட்டுவர நான் திட்டமாக எண்ணினேன்" என்று எடுத்துரைத்தனர்.

அறிவிப்பவர் - இப்னு உமர் (ரலி)

ஷாபி மத்ஹபின் படி இமாம் குத்பா ஓதும்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெயரை உச்சரிக்கும்போது ஏனையோர் நிதானமான குரலில் ஸலவாத் கூறுவது சுன்னத்தாகும். இமாம் கலீபாக்களைப்பற்றியும் மற்ற நஹாபாக்களைப் பற்றியும் குறிப்பிடும்பொழுது ஆண்களைப்பற்றியதானால் ரலியல்லாஹு அன்ஹு என்றும், பெண்களைப்பற்றியதானால் ரலியல்லாஹு அன்ஹா என்றும் கூறுவது சுன்னத்தாகும்.

இமாம் குத்பாவில் துஆ ஓதும் பொழுது ஏனையோர் ஆமீன் கூறுவது சுன்னத் என்று இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர். எனவே கைகளை உயர்த்தாது மெதுவாக ஆமீன் கூறிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு துஆவுக்கும் ஆமீன், என்று கூறுவதைவிட எல்லாவற்றிற்கும் சேர்த்து இறுதியாக ஆமீன் கூறுவது சிறந்ததாகும்.

இமாம் குத்பா பேருரை நிகழ்த்தும் பொழுது அவர் அருகே அமர்ந்து அவரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது சுன்னத்தாகும். குத்பாப் பிரசங்கம் நடைபெறும் பொழுது ஒருவருக்கு தும்மல் ஏற்படின் அவர் "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறுவதும் அதற்கு அருகில் இருப்போர் "யர்ஹமுகல்லாஹ்" என்று பதில் மொழிவதும் சுன்னத்தாகும்..ஆதாரம்: பத்ஹுத்தையான்

ஒருவன் ஜும்ஆ அன்று வழக்கமாகப் பின்வரும் பைத்தை ஓதிவருவாராயின் ஈமானுடன் இறப்பெய்துவான். என்று அப்துல் வஹ்ஹாபுஷ் ஷ.'.ரானி (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.

إلهي لست للفردوس أهلا
ولا أقوى على نار الجحيم
فهب لي توبة واغفر ذنوبي
فإنك غافر الذنب العظيم

ஜஹீம் என்ற நகரத்தின்துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலுடையோனுமல்ல யா அல்லாஹ் ! மாண்புமிகு பிர்தௌஸ் என்றும் சுவனத்திற்கு உரித்தானவனுமல்ல திட்டமாக நீ பாவம், பொறுப்பவனாகவும் மாண்புடையோனுமாக உள்ளாய். ஆதலின் நீ எனக்கு தௌபாவை பரிசாக வழங்கி என் பாவங்களைப் பொறுத்தருள்வாயாக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் ஜமாஅத்தார்களே ! நிச்சயமாக அல்லாஹ் இந்நாளை நமக்கு ஒரு பெருநாளாக ஆக்கிவைத்திருக்கிறான். ஆதலால் நீங்கள் குளித்துச் சுத்தமாகி ஜும்ஆவுக்குச் செல்லுங்கள். எவரிடம் நறுமணம் இருக்குமோ அவர் அதைப் பாவித்துக் கொள்ளட்டும். அவர் பல் விளக்கி வாய் நாற்றத்தையகற்றிக் கொள்ளட்டும். (நபிமொழி - இப்னுமாஜா)

ஜும்ஆவுடைய நாளன்று பள்ளிக்குச் சென்ற உங்களில் எவரும் ஏற்கனவே உங்களுக்கு முன்னர் வந்த உங்கள் சகோதரரை எழுப்பி விட்டு அவர் இருந்த இடத்தை கைப்பற்றிக் கொள்ள வேண்டாம். என்றாலும்இடம் தரும்படி அவரை நீங்கள் வினயமாய் வேண்டலாம். (நபிமொழி - முஸ்லிம்)

குறிப்பு 1 :-முன்னணிகளில் இடைவெளி இருக்கின்றது என்பதை அறியும் ஒருவர், அணிகளிலுள்ளவர்களைக் கடந்து முன் செல்வது தவறல்ல. ஆனால், முன்னணிகளில் அவருக்கொரு இடம் இல்லை என்பதை அறிந்தும் ஜனங்களைக் கடந்தும், மிதித்தும், சவட்டியும், தாண்டியும், முண்டியடித்துக் கொண்டு முன்செல்வதைத் தான் நபி மொழி மூலம் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. இது ஜனங்களை அவமதித்து அவர்களின் பொறுமையைச் சோதிப்பதாகவுள்ளது.

குறிப்பு 2 :-இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கையில் ஒருவர் மற்றவருடன் பேசுதல் விரும்பத்தகாதது. (மக்ருஹ்) என்பது ஷாபியீ மத்ஹபின் சட்டமாகும். ஆனால் கூடாது. (ஹறாம்) என்பது இதர மூன்று மத்ஹபுகளின் சட்டமாகும். இது எவ்வாறிருப்பினும் ஒரு குருடருக்கு ஒரு ஆபத்து நேரும் சமயம் விஷஜந்து தீண்டவரும் நேரம், உயிருக்கோ, உடலுக்கோ, கெடுதல் விளையும் வேளை, எதிர்பாராத விதம் விபத்து, இன்னும் இவை போன்ற தவிர்க்க முடியாத ( பேசித்தான் ஆக வேண்டும் என்ற ) சூழ்நிலைகள் உருவாகும் பொழுது பேசுதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அத்தியாவசிய தேவை ஏற்படும் பொழுது வாய் திறந்து மொழிதல் விலக்கல்ல. அத்தியாவசியம் என்பது அந்நான்கு மதுஹபுகளிலும் முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்ட ஒன்றித்த முடிவாகும். வாய் திறந்து மொழிவதன்றி கையால் அல்லது வேறு எந்த வகையால் சைகையின் மூலம் பேசிக் கொண்டிருப்பதைத் தடை செய்வதோ அல்லது மேற்கூறப்பட்டவைகளை நிவர்த்தி செய்வதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகையிலும் தடை விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அணிகளைச் சீர்படுத்துக

ஜும்ஆவிலும் மற்ற நேர ஜமாஅத்துத் தொழுகைகளிலும் அணிகளை நேராக்கிச் சீராக்கி வரிசைகளில் இடைவெளி இல்லாது இருக்குமாறு கவனித்துக் கொள்வது அவ்வணிகளில் நிற்பவர்கள் மீது அத்தியாவசியமானதாகும்.

உங்கள் அணிகளைச் சீர்படுத்துங்கள். புயங்கள் ஒன்றோடொன்று நேர்படச் செய்யுங்கள். எந்த இறைவன் மீது எனது ஆன்மா உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக நிச்சயமாக ஷைத்தான் ஆட்டுக் குட்டி நுழைவது போல அணிகளின் இடைவெளியில் நுழைவான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் - அபூதாவூத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் ஈடுபடுவதற்கு முன்னர் எங்களுடைய புயங்களை தொட்டு நேர் செய்பவர்களாக இருந்தார்கள். அணிகளில் நேராக நில்லுங்கள். நீங்கள் மாறுபட்டு நிற்காதீர்கள். (நீங்கள் மாறுபட்டு நிற்பீர்களானால்) உங்கள் உள்ளங்கள் மாறுபட்டு விடும். உங்களில் தொழுகையின் சட்ட விதிகளை நன்கறிந்தவர்கள் என்னை அடுத்து நிற்கவும். பிறகு அவர்களை அடுத்து ........ பின்னர் அவர்களை அடுத்து............. (நிற்கவும்) என்று சொல்வார்கள் (ஆதாரம்-அபூமஸ்ஊது - முஸ்லிம்)

தொழுகையின் சட்ட விதிகளை நன்கறிந்தவர்கள் இமாமை அடுத்த அணியிலும் அன்னவர்களை அடுத்த ஸ்தானத்தில் உள்ளவர்கள் அவர்களை அடுத்தும் இப்படியாக அவர்களின் அறிவுக்கலையின் அந்தஸ்துக்கேற்ப அணிகளை நிரப்புதல் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இமாமுக்குத் தொழுகையில் தவறுதல் ஏற்படும் போது முன் அணியில் அதற்குப் பின் அணியிலுள்ளவர்கள் தொழுகையின் சட்ட விதிகளை நன்கறிந்தவர்கள் நிற்பதால் இமாமுடைய தவறுதல்களைக் கூர்ந்து கவனித்து அவருக்கு உணர்த்துவதற்கு வாய்ப்பு உண்டாகும் என்பதற்காகவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வித விதி முறையை விதித்தார்கள் என்பதை உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளுங்கள் ! அருந்துங்கள் !

மஸ்ஜிதுக்குள் நுழைவதற்கு முன்னும் பின்னும் அனுஷ்டிக்க வேண்டிய பல அம்சங்கள் :-

1 மஸ்ஜிதில் ஹவ்ளில் வுலுச் செய்யும் பொழுது ஹவ்ளில் சுற்றி உட்கார்ந்து இருப்பவர்களைக் கவனித்து அவர்கள் மேல் நீர் சிந்தாத அளவுக்கு வுலுச் செய்தல்.

2 வுலுச் செய்யும் பொழுது பல் விளக்கி விட்டு எச்சில் கையை ஹவ்ளில் விடாமல் அடுத்த கையினால் தண்ணீர் எடுத்து சுத்தப்படுத்தி விட்டு தொடர்தல்.

3 வாய்க் கொப்பளிக்கும் பொழுதும் மூக்கைச் சிந்தும் பொழுதும் ஹவ்ள் தண்ணீரில் தெறிக்காமல் ஹவ்ளுக்கு வெளியில் விழும்படி செய்தல்.

4 முகம் மற்றும் வுலுவின் உறுப்புகளைக் கழுவும் பொழுது காலை ஹவ்ளில் அலம்பாதிருத்தல்.

5 குல்லத்தைனி என்னும் பெருந்தண்ணீரைக் கொண்ட பெரிய ஹவ்ளாக இருந்த போதிலும் பொதுவாக அடுத்தவர்களுக்கு வெறுப்பு உண்டாகும் எச் செயலையும் அதில் செய்யாதிருத்தல்.

6 எக்காரணம் கொண்டும் ஹவ்ள் நீரை அநாவசியமாக்காதிருத்தல்.

7 பள்ளியினுள் வலது காலை முன் வைத்து நுழைந்தவுடன் முதலில் சலாம் சொல்லி இஃதிகாபு நிய்யத்து வைத்து, உட்காருவதற்கு முன் பள்ளியின் காணிக்கைத் தொழுகை இரண்டு ரக அத் தொழுதல்.

8 உட்காரும் போது முன்னால் சென்று அணியணியாக ஆரம்பத்திலேயே அமர்ந்து கொண்டு பின் வருபவர்களுக்குச் சிரமம் இல்லாது இடம் அளிக்க உதவுதல்.

9 முன் செல்லும் பொழுது ஜனங்களைக் கடந்தும் தாண்டியும் மிதித்துச் செல்லாதிருத்தல்.

10 காணிக்கைத் தொழுகையை முடித்தவுடன் பாங்கொலிக்கும் வரை திருமறை, திக்ரு, சலவாத்து முதலியனவைகளை ஓதல்.

11 குட்டி ஷைத்தானின் மாய வலையில் சிக்கி தூக்கத்திற்கு அறவே இடங்கொடாதிருத்தல்.

12 உறக்கத்தின் முதல் முழக்கமான கொட்டாவி வந்தால் இடக்கையின் வெளிப்புறத்தால் வாயை மூடி அடுத்தவர் முகம் சுழிக்காத வண்ணம் அடக்கத்துடன் விடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 தும்மல் போடும் பொழுதும் சப்தத்தை இயன்றளவு குறைத்துத் தும்முதல்.

14 பள்ளியினுள் ஓரிடத்தை தனக்கென உரித்தாக்கிக் கொள்ளாதிருத்தல்.

15 அணியிலிருப்பவர்களை நெருக்கித் தள்ளிக் கொண்டு இடம் பிடிக்காதிருத்தல்.

16 தொழுது கொண்டிருப்பவருக்கு முன்னால் செல்லாதிருத்தல்.

17 எச்சில் துப்பாதிருத்தல். சுடக்கு விடாதிருத்தல். (நெட்டி முறித்தல் கூடாது)

18 எத்தகைய அசுத்தத்தை விட்டும் பள்ளியைப் பாதுகாத்தல்.

19 சுத்தம், அசுத்தம் தெரியாத சிறுவர்களையும், பைத்தியக்காரர்களையும் நுழைய விடாதிருத்தல்.

20 பெரு வியாதி உடையோரைக் கண்டிப்பாக வர விடாமல் தடுத்து நிறுத்தல்.

21 இமாம் குத்பா ஓதுவதற்கு முன் சுன்னத்துத் தொழுகையை முடித்துக் கொள்ளல்.

22 இமாம் குத்பா ஓத ஆரம்பித்து விட்டால் சுன்னத்துத் தொழுகையில் ஈடுபட்டிருப்பவர்கள் விரைவாக அத் தொழுகையை முடித்துக் கொண்டு இமாம் ஆற்றும் சொற்பொழிவைக் கேட்க முனைதல்.

23 இமாம் மிம்பரில் ஏறிவிட்டால் எக்காரணம் கொண்டும் பள்ளியினுள் இருப்பவர்கள் எத்தொழுகையையும் தொழாதிருத்தல்.

24 இமாம் குத்பா ஓதிக் கொண்டிருக்கையில் எந்தப் பேச்சும் பேசாதிருத்தல்.

25 இமாம் மிம்பரை விட்டிறங்க முன் அவசர அவசரமாக எழுந்து நிற்பது ஒழுங்கீனமாகக் கருதுதல்.

26 முஅஸ்ஸின் இகாமத்தில் கத்காமத்திஸ்ஸலாத் என்று சொல்லும் போதே நாம் எழும்ப வேண்டும்.

27 தொழும் பொழுது நிச்சயமாக ஓதும் சூராக்களை தனக்கு மட்டும் தான் கேட்கச் செய்ய வேண்டுமே தவிர அடுத்தவர்களுக்குக் கேட்காமல் ஓதல்.

28 அணிகளில் நிற்பவர்கள் மற்றவர்களுக்குத் தாராள மனதுடன்இடங்கொடுத்து தனித்து நிற்பவர்களையும் அணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து நிற்க வேண்டுதல்.

29 பள்ளியினுள் கொடுக்கல் வாங்கல் தொழில் ஏதும் செய்யாதிருத்தல்.

30 தொழுபவர்களுக்கு இடையூறாகும் விதத்தில் இரைந்து சப்தமிட்டு எதையும் ஓதாதிருத்தல்.

31 உலகப் பேச்சுக்கள் எதையும் அங்கு பேசாதிருத்தல்.

32 பீடி, சிகரட், சுருட்டு போன்ற புகை வஸ்துக்களைப் பாவித்து விட்டு அவற்றின் துர்வாடையுடன் பள்ளியினுள் நுழையாதிருத்தல்.

33 தலையைத் திறந்த வண்ணம் தொழுதலை அசட்டுத்தனமாக எண்ணுதல்.

34 தொழுகை முடிந்தவுடன் கலைந்து செல்லும் பொழுது அமைதியாகவும் அடக்கத்துடனும் இறை நினைவோடும் செல்லுதல்.

35 ஐற்காலத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை மற்றும் இதரத் தொழுகைகள் அனைத்தையும் முறையோடு தொழுவதற்கு சன்மார்க்க சரீஅத்துச் சட்ட அறிவு தேவை என்பதை எவரும் மறந்து விடக் கூடாது. அவரவரின் மதுஹபின் பிரகாரம் தொழுகையின் சட்ட விதிகளை அறியாது தொழும் எத்தொழுகையும் பயனற்றதாய் போய் விடும் என்பதை உணர்ந்து செயல்படுக.

குறிப்பு:- மேலே சொல்லப்பட்ட நியதிகள் பொது அறிவுகள் யாவும் சாதாரண தொழுகை முதல் ஜனத்திரள் அதிகமாகவுள்ள ஜும்ஆ மற்றும் பெருநாள் தொழுகைகள் ஈறாக அனைத்துக்கும் பொருந்தக் கூடியவைகளும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய முறைகளுமாகும்.

தீங்குகளிலிருந்து காவல் பெற:-

அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களின் திருமகளார் அஸ்மா (ரழி) அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள், ஜும்ஆத் தொழுகையில் இமாம் சலாம் கொடுத்து தொழுகையை முடித்ததும் ஒருவன் சூரா பாத்திஹா, திருக்குர் ஆனில் இறுதி சூராக்கள் மூன்று ஆகிய ஒவ்வொன்றையும் 7 முறை ஓதினால் அவனுடைய இம்மையையும் மறுமையையும் நலமாக்கி அவனையும் அவனது குடும்பத்தவரையும் எல்லா விதமான தீங்குகளிலிருந்தும் அல்லாஹ் காப்பாற்றுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் தரிசிக்க

வெள்ளிக்கிழமை இரவு இரண்டு ரகஅத் நபில் தொழுகை தொழ வேண்டும். ஒவ்வொரு ரகஅத்திலும் சூரா பாத்திஹாவுக்குப் பின் ஆயத்துல் குர்ஸி ஒரு தடவையும், குல்ஹுவல்லாஹ் சூரா பதினைந்து தடவையும் ஓதி முடித்து துஆ இறைஞ்சிய பின் எவருடனும் பேசாது படுத்துறங்கிவிடின் நிச்சயமாக அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் தரிசிக்கலாம். ஒரே இரவில் அத்தரிசனம் கிடைக்காவிடினும் மனம் தளர்ந்து விடாது தொடர்ந்த இவ்வாறு செய்தால் நிச்சயமாக நபி அவர்களைக் கனவில் தரிசிக்கும் பேறு கிடைக்கும். பெருமானாரைக் கனவில் காண்போர் ஈமானுடன் இறப்பெய்துவர். மேலும் என்னைக் கனவில் கண்டவன் என்னை நேரில் கண்டவர் போலாவார். ஷைத்தான் என் உருவில் வர இயலாது. என்னைக் கனவில் கண்டவர் சுவனம் புகுவர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்.

இவ்வாறு க்வாஜா முயீனுத்தீன் ஜிஷ்த்தி (ரஹ்) அவர்களும் கூறியுள்ளனர்.

### பட்டோலை வலது கையில் கிடைக்க

ஒருவர் ஜும்ஆ இரவில் இரண்டு ரகஅத் நபில் தொழ வேண்டும். அதில் முதல் ரகஅத்தில் சூரா யாசீனும், இரண்டாவது ரகஅத்தில் சூராமுல்கும் (தபாரகல்லதீயும்) ஓத வேண்டும். இவ்விதம் செய்தால் அவ்விரண்டு சூராக்களிலுமுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை அளவு பேரொளி மறுமையில் அவரின் முன் வழி காட்டிச் செல்லும். அவரின் பட்டோலை அவரின் வலது கையில் வழங்கப்படும். அவருக்கு நரகத்திலிருந்து விடுதலை நல்கப்படும். அவரின் உறவினர் எழுபது பேர்களுக்கு அவர் செய்யும் மன்றாட்டம் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்படும். இது பற்றி ஐயமுறுவோர் நயவஞ்சகராவார் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### கைகளை முத்தமிடுவதும் சலாம் கொடுப்பதும் முஸாபஹா செய்வதும்

அப்துல் கைஸ் என்னும் தூது கோஷ்டியிலுள்ள ஜாரி... ரலியல்லாஹுஃ அன்ஹுஃ அவர்கள் அறிவிக்கிறார்கள். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதீனாவுக்கு வந்த போது எங்களுடைய வாகனங்களை விட்டிறங்கி விரைந்து சென்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் புனித கரத்தையும் காலையும் நாங்கள் முத்தமிட்டோம். (மிஷ்காத் 402)

இந்த ஹதீதுக்கு விளக்கம் கூறும் போது இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், ஒரு முஸ்லிம் உலகப் பற்றற்றவராக, நல்ல குணமுள்ளவராக, கல்விமானாக, மார்க்கப்பற்றுடையவராக, இருந்தால் அவருடைய கரத்தை முத்தமிடுதல் முஸ்தஹப்பு எனும் நன்மையின் பாற்பட்டதாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கால்களை முத்தமிட்டது அவர்கள் அகிலத்தின் அருளாகவும் ஒளிச் சுடராகவும் இருப்பது அவர்களுக்குரிய தனிச் சிறப்பாகும்.ஏன் ?

அந்த ஒளி இல்லையேல் உலகமே இல்லையே !

ஆகவே முஸாபஹா செய்வதும் முஆனகா (ஆலிங்கனம்) செய்வதும் நல்லோர்களான செய்குமார்களின் கைகளை முத்தமிடுவதும் நன்மைக்குரிய செயல்களாக இருக்கின்றன. நல்ல செயல் முறைகள் பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இருந்துவருபவை மார்க்கத்தில் அனுமதி உண்டு என்று இமாம்களின் நூல்களில் தெளிவாகக் கூறியிருப்பதை அறிந்திருந்தும் அதைப் புறக்கனிப்பதும் பிறரைத் தடை செய்வதும் எவ்வளவு பெரிய குழப்பம் ?

இதோ தொழுகைக்குப் பின்னால் முஸாபஹா செய்து கொள்வது பற்றி ஷாபி மதுஹபின் சட்ட நூல்கள் கூறுவதை வரிசைப்படுத்தி கீழே தரப்படுகின்றது.

அஸர். சுபஹ் தொழுகைக்குப் பின்னால் முஸாபஹா செய்வது ஆகுமான பிதுஅத்தாகும். ஹறாமான பிதுஅத்துகளைத் தவிர் மற்ற பிது அத்துக்கள் கேடு இல்லை என்று இமாம் இபுனுஹஜர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(நூல் - பதாவாஹதீதிய்யா)

அஸர், சுபஹ் தொழுகைக்குப் பின்னால் முஸாபஹா செய்வது குற்றமில்லை. (ஷர்வானி பாகம் 9 பக்கம்- 203)
காலையிலும் மாலையிலும் கார்மானத்தினுடைய மலக்குகள் வானத்திலிருந்து இறங்குகிறார்கள் என்ற ஹதீதின் அடிப்படையில், அவர்களுடனே முஸாபஹா செய்வது பரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக அஸர், சுபஹ் தொழுகைக்குப் பின்னால் முஸாபஹா செய்வது சுன்னத்தாகும். (பவாயிதுல் மக்கிய்யார் ப127)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸர், சுபஹ் தொழுகைக்குப் பின்னால் வழக்கமாக்கப்பட்ட முஸாபஹா ஆகுமான பித்துஅத்தில் நின்றுமுள்ளது. நவவி இமாம் இதை நல்ல காரியம் பித்து அதுல் ஹஸனா என்று கூறியுள்ளார்கள். (நூல் - பி.'.யா)

அஸர், சுபஹு தொழுகைக்குப் பின்னால் முஸாபஹா செய்வது முஸ்தஹப்பு, ஏனெனில் மலக்குகள் ஆதமுடைய மக்களின் உருவத்தில் வந்து தொழுகிறவர்களுடன் கலக்கின்றார்கள். ஆகவே, அவர்களின் முஸாபஹாவைக் கொண்டு பரகத் பெறுவதற்காக ( புஷ்ரல் கரீம் பாகம்-1 ப-107)

அஸர், சுபஹ் தொழுகைக்குப் பின் முஸாபஹா செய்வது ஆகும். பிதுஹதுல் ஹஸனா (அழகிய நூதனங்கள்) என்பது சுன்னத்தேயாகும். (நூல் - இஆனா)

கதாதா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் முஸாபஹா செய்வது நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய சஹாபாக்களின் காலத்தில் இருந்ததா ? என அனஸ் (ரழி) அவர்களிடம் நான் கேட்டேன். ஆம் . இருந்தது என அவர்கள் பதில் கூறினார்கள். (மிஷ்காத் - 401)

முஸாபஹா என்பது ஒரு முஸ்லிம் தன்னுடைய கைகளின் உட்புறங்களை மற்றவர்களது கைகளின் உட்புறத்துடன் சேர்த்து வைப்பது ஆகும்.

இரு முஸ்லிம்கள் சந்தித்துக் கொண்டால் முஸாபஹா செய்து கொண்டால் அவ்விருவரும் அங்கிருந்து பிரிந்து செல்லும் முன்பே அவர்களின் சிறிய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்று நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹசரத் பர்ராஉ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நிச்சயமாக ஒரு மு.மின் மற்றொரு மு.'.மினைச் சந்தித்து அவருக்கு சலாம் கூறி அவர் கையைப் பிடித்த முஸாபஹா செய்தால் மரத்தில் இலைகள் உதிர்வது போல் அவ்விருவரின் பாவங்கள் உதிர்ந்து விடுகின்றன என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். (நூர் - தர்கீப் - வால்யூம் - 4)

மற்றொரு ஹதீதில் ஒரு முஸ்லிம் தன் (முஸ்லிம்) சகோதரனைச் சந்தித்து அவர் கையைப் பிடித்து முஸாபஹாச் செய்தால். கடினமான காற்றுடைய நாளில் காய்ந்த மரங்களிலிருந்து இலைகள் உதிர்வது போல் அவருடைய (சிறிய) பாவங்கள் உதிர்ந்து விடுகின்றன. கடல் நுரை போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விருவரின் பாவங்கள் இருந்த போதும் மன்னிக்கப்படுகின்றன என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹசரத் ஸல்மான் பார்ஸி (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஒருவருக்கொருவர் முஸாபஹாச் செய்து கொள்ளுங்கள். அது மனக்கசப்பைப் போக்கும். ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து கொள்ளுங்கள். நீங்கள் நேசத்துடன் இருப்பீர்கள் பகைமையும் நீங்கும் என நபி (ஸல்) அவர்கள் நவின்றனர். (மிஷ்காத் - 403)

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைச் சந்திக்கும் போதெல்லாம் முஸாபஹா செய்வது முஸ்தஹப்பாகும். (விரும்பத்தக்கது) என இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். முஸாபஹா செய்வது அன்பை அதிகமாக்கும் என இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளாாகள். (இஹ்யா)

முஸாபஹா செய்யுமுன் சலாம் கூறிக் கொள்ள வேண்டும். (மிஷ்காத்) நபி (ஸல்) அவர்கள் தோழர்கள் ஒருவரையயொருவர் சந்தித்தால் முஸாபஹா செய்து கொள்வார்கள். பிரயாணத்திலிருந்து திரும்பினால் முஆனகா (ஆலிங்கனம்) செய்து கொள்வார்கள் என அனஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

முஸாபஹாவைப் போன்றே முஆனகா எனும் கட்டித்தழுவுதலும் அன்பை உண்டாக்குகிறதாகவும், பாவங்களைப் போக்குகின்றதாகவும் இருக்கிறது.

அல்லாஹ்வின் தூதரே ! என்னை சுவர்க்கத்தில் நுழைய வைக்கும் செயலை எனக்கு அறிவித்துக் கொடுங்கள் என்று ஒரு ஸஹாபி கேட்டதற்கு அழகிய பேச்சும், ஸலாம் கூறுவதும். பாவமன்னிப்பை உண்டாக்குபவையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் - இஹ்யா)

மனிதர்களில் அல்லாஹ்வுடைய ரஹ்மத்துக்கு மிக நெருக்கமானவர் ஸலாமைக் கொண்டு ஆரம்பம் செய்தவர் என நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றனர்.
அறிவிப்பவர் - அபூஉமாமா (ரலி) மிஷ்காத் பக்கம் - 398

ஸலாம் கூறுவது கொண்டு முந்திக் கொள்பவர் பெருமையை விட்டும் நீங்கியராவார் என நபி (ஸல்) அவர்கள் அருளியதாக அப்துல் லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்துள்ளார்கள். (மிஷ்காத் - பக்கம் - 400)

இரண்டு முஸ்லிம்கள் சந்தித்து ஸலாம் கூறி முஸாபஹா செய்து கொள்வார்களானால், அவர்களுடனே நூறு ரஹ்மத்துகள் இறங்குகின்றன. அவற்றில் ஸலாமை ஆரம்பித்தவருக்கு தொன்னூறும், பதிலளித்தவருக்கு பத்தும் கிடைக்கின்றன என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஸலாம் கூறுமுன் எவரேனும் பேசினால் அவருக்கு பதில் சொல்லாதீர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு லோகத் தலைவர் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அருளினார்கள் மனிதர்களில் அல்லாஹ்வின் ரஹ்மத்துக்கு மிக அதிகமாக நெருக்கமானவர் ஸலாமைக் கொண்டு ஆரம்பம் செய்பவர். எனவே, ஸலாம் என்பது மிக உயர்ந்த சொல்லாக அல்லாஹ்வின் ரஹ்மத்தைப் பொழிவதாக இருப்பதால் நம் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற நன் மார்க்கத்தைப் பேணிட அல்லாஹ் நல்லருள் புரிவானாக.

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமின் மீதுள்ள கடமைகள் ஆறு.

1. சந்தித்தால் ஸலாம் கூறுவார்.
2. அழைத்தால் அதனை ஏற்றுக் கொள்வார்.
3 தும்மினால் (தும்மியவர் அல்ஹம்துலில்லாஹ் என்றால், அதற்கு) பதில் கூறுவார்.
4. நோயுற்றால் விசாரிப்பார்.
5. மரணித்தால் ஜனாஸாவைப் பின்தொடருவார்.
6. தனக்கு விருப்பமானதையே அவரும் விரும்புவார்.

என நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹசரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (மிஷ்காத் பாசம் - 398 )

நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுதல்.

1 கப்றில் உங்களிடத்தில் என்னைப்பற்றியே முதல் விசாரணை நடக்கும். ஆதலால் என் மீது அதிகமாக ஸலவாத்து ஓதிக் கொள்ளுங்கள். என் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்லுங்கள் அது உங்களுக்கு சதகாவின் தானத்திலிருக்கின்றது.
அறிவிப்பவர் - அபூஹுரைரா (ரலி) அவர்கள்.

2 என் மீது அதிகமாக ஸலவாத்துச் சொன்னவரே கியாமத் நாளில் என்னை அதிகமாக நெருங்கி இருப்பாரென நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியதாக இப்னு மஸ் ஊத் (ரலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்-திர்மிதி இப்னு அப்பாஸ் (ரலி) நூறுல் முன்லம் என்ற நூலிலும் காணப்படுகிறது.

3 என் மீது அதிகமாக ஸலவாத்து ஓதுபவர்கள் மறுமையில் அர்ஷின் நிழலில் இருப்பார்கள். (நபி மொழி)

4 ஒருவர் என்மீது ஒருமுறை ஸலவாத்து ஓதுவாராயின் அவருக்கு அல்லாஹ் 100 முறை கிருபை செய்கிறான்.

5 சுவர்க்கத்தில் மிக உயர்வானவர் என்மீது அதிகமான ஸலவாத்துச் சொன்னவர்தான்.

6 என்மீது 1000 முறை ஸலவாத்துச் சொல்பவர் சுவர்க்கத்தைக் கொண்டு அவர் நற்செய்தி அறிவிக்கப்படாமல் மரிக்க மாட்டார்.

7 என்மீது ஆயிரம் முறை ஸலவாத்துச் சொல்லும் மேனியை நரக நெருப்பு ஒரு போதும் தீண்டாது.

8 என் மீது ஸவாத்து ஓதுவதை ஒருவர் மறந்தாராயின் சுவர்க்கத்தின் பாதையை அவர் தப்ப விட்டுவிட்டார்.

9 என்மீது நீங்கள் ஸலவாத்து ஓதுவது உங்களுடைய பாவங்களை நெருப்பை ஜலம் அழிப்பது போல அழித்து விடும்.

10 வெள்ளிக்கிழமையன்று என்மீது 40 முறை ஸலவாத்துச் சொல்பவருக்கு 40 வருட பாவங்களை அல்லாஹ் அழித்து விடுவான்.

11 என்மீது சலவாத்துச் சொல்லும் வரை எந்த துஆவிற்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் திரையில்லாமல் இல்லை. ஆனால், அதனைச் செய்தால் அந்தத் திரை கிழிந்து விடும். அந்த துஆ (அல்லாஹுத்த ஆவிடம்) சென்று விடும். அவ்வாறு செய்யவில்லையானால் அந்த துஆ திரும்பி விடும்.

12 ஒருவர் என்மீது ஒரு முறை ஸலவாத்து ஓதுவாராயின் அவருக்கு அல்லாஹ் 100 ஹாஜத்துகளை நிறைவேற்றுவான். அவைகளில் 70 மறுமை சம்பந்தப்பட்டவை. 30 இம்மை சம்பந்தப்பட்டவை.

13 ஒருவர் என்மீது ஒரு முறை ஸலவாத்து ஓதுவாராயின் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் பத்து முறை ஸலவாத் ஓதுகிறார்கள்.

குறிப்பு :- அல்லாஹுத்த ஆலா ஸலவாத்துச் சொல்கிறான் என்பதற்கு கருணை செய்கிறான் என்பதும் மலக்குகள் ஸலவாத்துச் சொல்கிறார்கள் என்பதற்கு அல்லாஹுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலாவிடம் பாவ மன்னிப்புக்காகப் பிரார்த்தனை புரிகிறார்கள் என்பதும் பொருள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிருபை செய்யும் படி அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தல் என்பது கருத்து.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மனித வர்க்கத்திற்குச் செய்த உபகாரத்தைப் போல் வேறொருவரும் உபகாரம் செய்யவில்லை. ஆதலால், அவர்களுக்கு எல்லாரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, நாயகம் (ஸல்) அவர் மீது ஸலவாத்துச் சொல்வதானது அவர்கள் செய்த நன்றியை மறவாமலிருப்பதற்கு அடையாளமாக இருக்கிறது. அதனை மறப்பது செய்நன்றி கொன்ற செய்கையாகும். ( ஆதாரம் லுபாபுல் அக்பர் - அரபி நூல்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரைத்தார்கள், மறுமையில் திடுக்கங்களிலிருந்து நிவாரணம் பெற்று வெற்றி பெற விரும்புகின்றவர்கள் என்மீது ஸலவாத்து அதிகப்படச் சொல்லி வரட்டும் என்று ஸலவாத்துடன் கூடின துஆக்களை அல்லாஹ் நிச்சயமாக அங்கீகரித்து அருள் புரிவான். அமரர் ஜிப்ரீல் அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள், யாரசூலுல்லாஹ் ! தங்கள் மீது யார் உகப்புடன் அதிகப்பட ஸலவாத் சொல்கிறாரோ அவரது கரம் பிடித்து மறுமையில் ஸிராத்தல் முஸ்த்தகீம் பாலத்தின் மீது நடத்திச் செல்வேன் என்பதாக.

அமரர் மீகாயீல் (அலை) கூறினார்கள் - யா ! ரசூலுல்லாஹ் அவரைத் தங்களுடைய ஹவுளுல் கவ்தர் தடாகத்திற்கு கொண்டு வந்து சேர்ப்பேன் என்பதாக.

அமரர் இஸ்ராபீல் (அலை) அவர்கள் கூறினார்கள், யாரசூலுல்லாஹ் ! அவருடைய பாவங்களைப் பொறுத்தருளும் படி அல்லாஹ்விடம் மன்றாடி சுஜூது செய்வேன். அவருக்குப் பிழை பொறுக்கப்பட்டாலொழிய சுஜூதிலிருந்து என் சிரசை உயர்த்த மாட்டேன் என்பதாக !

அமரர் இஸ்ராயீல் (அலை) அவர்கள் கூறினார்கள் யா ரசூலுல்லாஹ் ! அவரது உயிரை நபிமார்களது உயிரைக் கைப்பற்றுவது போல் மிக மிருதுவாகக் கைப்பற்றுவேன் என்பதாக. என்மீது ஸலவாத்துச் சொல்லி வருபவருக்கு மறுமையில் எனது (ஷபாஅத்) பரிந்துரை கட்டாயமாகக் கிடைக்கும். ஆதாரம் - மனாஸிஹுல் அபுரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு துஆ !

ஹதீது ஒன்றில் கீழக்கண்டவாறு கூறுகிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு சுபஹு தொழுது முடித்தேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை நோக்கி உட்கார்ந்து இரு கரங்களையும் உயர்த்தி பிரார்த்தனை செய்தார்கள். எங்களுடைய நாட்டிற்கும் உணவுப் பொருட்களுக்கும் நீ பரக்கத்துச் செய்வாயாக. இந்த ஹதீதை தபராணி (ரஹ்) அவர்கள் கபீரிலும் அவ்ஸத்திலும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்கள் கூறுவதாவது நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்தால் சொல்வார்கள். அல்லாஹ்வே ! உன்னிடத்தில் பிரார்த்தனை செய்யக் கூடியவர்களில் ஹக்கைக் கொண்டு உன்னிடத்தில் நான் கேட்கிறேன். உறுதியாகக் கேட்கக் கூடியவர்களுக்கு உன்னிடத்தில் ஹக்கு இருக்கிறது. கரையிலும் கடலிலும் உள்ளவர்களுடைய துஆவை நீ ஒப்புக் கொள்வதும் பதில் கொடுப்பதுமானால் அவர்கள் உன்னிடத்தில் பிரார்த்தனை செய்வதில் எங்களையும் சேர்த்துக் கொள்வாயாக

எங்களின் நின்றும் அவர்களின் நின்றும் நீ துஆவை ஒப்புக் கொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்கும் எங்களுக்கும் நீ மன்னிக்க வேண்டுமென்றும் எங்களுக்கும் அவர்களுக்கும் நீ சுகத்தைத் தர வேண்டும் என்றும் எங்கள் எல்லோர்களுக்கும் வேண்டி நான் உன்னிடத்தில் கேட்கிறேன்.

இப்படிப்பட்ட பிரார்த்தனை யாராவது செய்தால் கரையிலும் கடலிலும் மனிதர்களுடைய பிரார்த்தனையில் அல்லாஹ் பங்கு சேர்க்காமல் இருக்க மாட்டான். இவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்வதுண்டு. இப்படி பர்ளுத் தொழுகைக்குப் பின் நபி (ஸல்) அவர்கள் வலது பக்கம் திரும்பி உட்கார்ந்து பன்மை வசனம் பதங்கள் உபயோகித்து கூட்டுப் பிரார்த்தனை செய்தார்கள் என்று ஹதீதில் நின்றும் உறுதியாகும் போது இந்தப் பிரார்த்தனை கேட்கக் கூடிய மஉமூன்கள் ஆமீன் சொல்ல வேண்டுமென்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

நான் பிரார்த்தனை செய்தால் நீங்கள் ஆமீன் சொல்லுங்கள்.

ஆதாரம் - தலாஇலுன்நுபுவத்

ஆமீன் சொல்லுவது முக்கியத்துவம் உள்ளதும் பிரார்த்தனையுமாகும். (ஸஹீகிஇபுனு ஹுஸைமா - பக்கம் 287 ல் ஒரு அத்தியாயமே எழுதியுள்ளனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமீன் கூறுவது முக்கியத்துவம் உள்ளது என்றும் அது பிரார்த்தனை என்றும் வெளிப்படுத்துகின்ற ஹதீதுகள் நிறைய இருக்கின்றன. நபி (ஸல்) அவர்களும் தங்களுடைய சஹாபாப் பெருமக்களும் மட்டும் இதைச் செய்தார்களில்லை. முன் நபிமார்களும் இதையே பழக்கமாக்கி இருந்தார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன.

இபாதத்தின் (வணக்கத்தின்) சாரமே துஆதான். தன்னிடம் கேட்கப்படும் துஆவை அல்லாஹ் மிகவும் விரும்புகிறான்.

முஃமினின் நெஞ்சிலிருந்து வெளியாகும் துஆ விதி வசத்தையே (தக்தீரையே) மாற்றி எழுதும் படி செய்கின்றது.

அல்லாஹ்விடத்தில் கேட்கப்படும் துஆவுக்குப் பயனில்லாது போவதே இல்லை. -நபி (ஸல்)

நபிஆதம் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்விடத்தில் துஆ செய்யும் சமயத்தில் (ரப்பனா - ளலம்னா - அன்புஸனா.......பீபி ஹவ்வா அலைஹிஸ்ஸலாம்) அவர்களையும் சேர்த்து துஆ செய்ததாகவும், நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கஃபா ஷரீபின் வேலை பூர்த்தியானதும் பின்னால் தங்கள் மகன் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் சேர்த்து ரப்பனா தகப்பல் மின்னா என்று பிரார்த்தனை செய்ததாக புனித குர்ஆனில் வருகிறது . மூஸா நபி (அலை) அவர்களும் ஹாரூன் நபி (அலை) அவர்களும் செய்த துஆவுக்கு பதில் கொடுக்கப்பட்டது. மூஸா நபி (அலை) அவர்கள் துஆச் செய்யவும் ஹாரூன் நபி (அலை) அவர்கள் ஆமீன் சொன்னதாகவும் ஹதீதில் வந்திருக்கிறது. ( நன்றி - ஷரீஅத் பேசுகிறது)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திஹா ஓதி முடிந்ததும் ஆமீன் கூறிக் கொள்வது சுன்னத் என்பதனை ஷறஹுல் முஹத்தப் கிதாபிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஆமீன் என்பதன் கருத்து யாதென்று வினவினேன். அப்போது அவர்கள் அவ்வாறே சொல்வாயாக என்பது அதன் கருத்து என்று உரைத்தார்கள்.

ஆமீன் உடைய மகத்துவம்

ஆமீன் என்பது இறைவனுடைய முத்திரை. எவ்வாறு ஒரு கடிதத்தில் முத்திரை இடப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டால் அதனை உரியவர் அன்றி வேறு யாரும் திறந்து பார்க்கவோ அல்லது அதில் கூடுதல் குறைவு செய்யவோ முடியாதிருப்பது போல் "ஆமீன்" என்பது அடியானுடைய விண்ணப்பத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பாதுகாத்துக் கொள்ளக் கூடியது.

வஹப் இப்னு முனப்பஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளதாக த..லபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் தப்ஸீரில் பின்வரும் விளக்கம் தருகிறார்கள்.

ஆமீன் என்பதில் அலிப் - மீம் - யே - நூன் ஆகிய நான்கு எழுத்துக்கள் உள்ளன. அடியான் ஆமீன் என்று கூறியதும் ஒவ்வொரு எழுத்திலிருந்தும் ஒவ்வொரு அமரரை அல்லாஹ் உண்டாக்குகிறான். ஒவ்வொரு அமரரும் ஆமீன் கூறுபவருக்கு பிழை பொறுக்கும் படியாக அல்லாஹ்விடம் துஆக் கேட்கிறார்கள். ஆமீன் என்பது ஆயத்து துன்பங்களையெல்லாம் தட்டி விளக்கும் வல்லமையுடையது என்பதாக இப்னு ஹஜர் அஸ்கலானி ரலியல்லாஹு அன்ஹு ஸஹீஹுல் புஹாரி உடைய விரிவு நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ரப்புல் ஆலமீனாகிய அல்லாஹ் விசுவாசிகளான தனது நல்லடியார்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்குரிய அடையாள முத்திரையாக ஆமீன் அமைந்துள்ளது எனறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரைத்துள்ளதாக நஜ்முத்தீன் நஸபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் அறிவித்துள்ளார்கள். தபாலுக்கு முத்திரையிடுவது போன்று ஆமீன் அமைந்திருக்கிறது என்பதாகவும் ஹதீது உள்ளது.

மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் அருள் செய்துள்ளார்கள், துஆ ஓதும் போது இமாம் வலல்லாழ்ழீன் என்று ஓதி முடிந்ததும் நீங்கள் ஆமீன் கூறுவீர்களாக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலக்குகளும் அப்போது ஆமீன் கூறுகிறார்கள். எவருடைய ஆமீன் மலக்குகளுடைய ஆமீனுடன் சேர்ந்து ஒன்றித்துள்ளதோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

ஆமீனுடைய மேற்கண்ட பலாபலன்களை அல்லாஹ் நம்மனைவருக்கும் தந்தருள்வானாக !இதற்கு நாம் ஆமீன் என்று மனம் கனிந்து சொல்வதையும் ஏற்றுக் கொள்வானாக.ஆமீன்!

***

மணக்கும் பூ

ஜும்ஆத் தொழுகை முற்றுப் பெற்றவுடன் சூரத்துல் இக்லாஸ் சூரத்துல் பலக் சூரத்துன்னாஸ் ஆகிய இம்மூன்று சூராக்களை ஏழு விடுத்தம் ஓதுபவர் எவரோ அவரை அடுத்த ஜும்ஆவரை எத்தகைய கேடுகளும் அனுகாமல் அல்லாஹ் காப்பாற்றுவான். ( நபி மொழி )

எவர் சூரத்துல் இக்லாஸ் ( குல்ஹுவல்லாஹு அஹத் ) சூரத்துல் பலக் சூரத்துன்னாஸ் ஆகிய சூராக்களை ஓதிய பிறகு,

اَللّٰهُمَّ يَاغَنِيُّ يَاحَمِيْدُ يَامُبْدِئُ يَامُعِيْدُ
يَارَحِيْمُ يَاوَدُوْدُ اَغْنِنِيْ بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

என்று ஓதுவாராயின் அவரை அல்லாஹ் செல்வச் சீமானாக்கி வைப்பான். அவர் எதிர்பாராத விதம் அல்லாஹ் உணவளிப்பான். ( நபி மொழி )

எவர் ஜும்ஆத் தொழுகைக்குப் பிறகு

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ اَسْتَغْفِرُ اللّٰهَ

என்று 100 விருத்தம் ஓதுவாராயின் அவருக்கு ஒரு லட்சம் பாவத்தையும் அவருடைய பெற்றோருக்கு இருபத்தி நான்காயிரம் பாவத்தையும் அல்லாஹ் மன்னிப்பான்.
( நபி மொழி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை சாந்தி என்றும் பொழிக !

அல்லாஹ்வின் அருமைத் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது உலக முஸ்லிம்கள் தங்களின் ஒவ்வொரு தொழுகையிலும், ஸலவாத்தும், ஸலாமும் கூறத்தவறுவதில்லை. நபிமணி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதத் தெரியாத முஸ்லிம்களே இருக்க முடியாது எனலாம். யார் எனது கபுருக்கு அருகில் வந்து என் மீது ஸலவாத்து ஓதுகிறாரோ அதை நான் கேட்கிறேன். மேலும் யார் எங்கேனும் தூரத்திலிருந்து என் மீது சலவாத் ஓதுகிறாரோ அது என்னிடம் கொண்டு வந்து சேர்க்கப்படுகிறது. இதற்கென்றே வானவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் வேலையே எங்கெல்லாம் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதப்பட்டதும் அவற்றை அந்த மலக்குகள் சுமந்து சென்று நபி (ஸல்) அவர்களின் திரு முன்னிலையில் சேர்ப்பிக்கிறார்கள்.

## மாண்பு மிகு ஐந்து ஸலவாத்துக்கள்

அல்லாஹும்ம சல்லி அலா முஹம்மதின் பிஅததிமன் சல்லா அலைஹி. வசல்லி அலா முஹம்மதின் பி அததி மன்லம் யுசல்லி அலைஹி வசல்லி அலா முஹம்மதின் கமா அமர்த்த பிஸ்சலாத்தி அலைஹி வசல்லி அலா முஹம்மதின் கமா துஹிப்பு அன்ய்யு சல்லா அலைஹி வசல்லி அலா முஹம்மதின் கமாயன்பகீ அன்ய்யு சல்லா அலைஹி

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களை ஒருவர் கனவிற் கண்டு அல்லாஹ் தங்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்று வினவிய பொழுது என் பாவங்களை பொறுத்தருளி என்னைப் பொறுந்திக் கொண்டான் என்று அவர்கள் பதில் கொடுத்தார்கள்.

"எதன் பொருட்டு ?" என்று அவர் மேற் கொண்டும் வினவிய பொழுது நான் வெள்ளிக்கிழமைகளில் ஓதி வந்த மேற் குறிப்பிட்ட ஐந்து ஸலவாத்துக்களின் பொருட்டால் என்று கூறி மேற் கூறிய ஸலவாத்துக்களை அறிவித்தார்கள்.

***

## மாண்பு மிகு திரு மதீனா

திரு மக்காவிலிருந்து முந்நூறு மைல் தொலைவிலுள்ள நகரம் யத்ரிபு எனும் ஊர். எம்பெருமானார் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் தம் திருப்பாதங்களைத் தாங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் மதீனத்துன் நபி (நபியின் பட்டிணம்) எனும் சிறப்புப் பெயரை இவ்வூர் பெற்றது.

எம் பெருமானாரின் திருமேனியைத் தாங்கி நிற்கும் காரணத்தால் நகரங்களில் நாயகம் என்றழைக்கப்படுகிறது. புனித மக்கா நகர் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஹரம் ஷரீபாக இலங்குவதைப் போன்று, மதீனா நகரம் மாநபியின் ஹரம் ஷரீபாக இலங்குகின்றது.

மதீனாவில் அனுஷ்டிக்கும் ரமழான் நோன்பு மற்ற இடங்களில் நோற்கப்படும் நோன்பைக் காட்டினும் ஆயிரம் மடங்கு மேலானது என்றும், இங்கு தொழப்படும் ஜும்ஆத் தொழுகை மற்ற இடங்களில் தொழப்படும் தொழுகையைக் காட்டினும் ஆயிரம் மடங்கு உயர்வானது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

மேலும் ஒருவர் ஹஜ்ஜுக் கடமையை முடித்து விட்டு மதீனா வந்து என் அடக்கஸ்தலத்தை தரிசிக்கவில்லையோ அவர் என்னை வெறுத்தவராவார் என்றும் இயப்பியுள்ளார்கள். நாள் தோறும் 70 ஆயிரம் மலக்குகள் இங்கு வந்து நபிகள் நாயகத்தின் பேரில் ஸலவாத்து ஓதுகிறார்கள். உலகில் பொழியப் பெறும் அருள்மாரியில் தொன்னூறு ரஹ்மத்துக்கள் மதினாவில் பொழியப் பெறுகிறது. திரு மதீனா ஊர், திரு நபியின் திரு மேனியைத் தாங்கும் பேறு பெற்றிருப்பதால் கஃபதுல்லாஹ்வைக் காட்டிலும் அல்லாஹ்வின் அர்ஷைக்காட்டிலும் பெருஞ் சிறப்புற்றுத் திகழ்கிறது.

தினமும் அல்ஹம்து சூரா ஒரு முறை, குல்ஹு வல்லாஹு அஹத் சூரா நான்கு முறை, குல்அஊது பிரப்பில் பலக் ஒரு முறை, குல்அஊது பிரப்பின்னாஸ் ஒரு முறை ஓதி வந்தால் ஷரீஅத், தரீகத் - ஹகீகத் - மஃரிபத் என்ற நிலைகளை அடையலாம் என்று தைக்கியா ஸாஹிபு ஒளி நாயகம் அவர்களுக்கு அவர்களின் முன்னோர் சொல்லியிருப்பதாக அவர்கள் கூறியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமாம் பக்ருத்தீன் ராசி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பற்றிய அரிய செய்தி

இருதய நோயால் துன்புற்றுக் கொண்டிருந்த இவர் ஓர் ஊருக்குச் சென்றிருந்த பொழுது மூச்சு அடைப்பு ஏற்பட்டு மயங்கிக் கிடந்தார் என்றும் அதைக் கண்டு அவ்வூரார் இவர் இறந்துவிட்டாரென்று எண்ணி இவரை நல்லடக்கம் செய்தனர் என்றும் புதைகுழியில் வைத்து இவருக்கு உணர்வு ஏற்பட்டு எப்படி அதிலிருந்து வெளியேறுவது என்பதை அறியாதிருந்த நிலையில் தமக்கு வெளியே செல்ல உதவியளிப்பின் அல்லாஹ்வுக்காக மகத்தான செயல் ஒனறைச் செய்வதாக இறைஞசினார் என்றும், அப்போது கபன் திருடன் ஒருவன் வந்து அவ்வடக்க இடத்தை தோண்ட இவர் அதிலிருந்து எழுந்து வர அவன் பேயாக நினைத்து அஞ்சி ஓட ... இமாம் அவர்கள் நேரே பள்ளிவாசல் வந்து வுலுச் செய்து அக்கனமே தப்ஸீருல் கபீரை எழுதத்துவங்கினார் என்றும் கூறுவர்.அதற்கு அப்பெயரைத் தம் ஞானாசிரியரின் நினைவாகச் சூட்டினார் என்றும் கூறப்படுகிறது. நன்றி - இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்

## இக்லாஸ் (சித்த சுத்தி) மிக முக்கியம்

ஒருவன் தலைப்பாகை கமீசுடன் பள்ளியில் நீளமான தொழுகையைத் தொழுதாலும் சரியே அவனுடைய மனதிலே அல்லாஹ்வின் முஹப்பத் (பிரியம்) இக்லாஸ் (சித்த சுத்தி) எனும் ஜோதி இல்லாமல் படைப்புகளுடைய முகத்தாட்சனைக்காக அவன் தொழுதால் அவன் தொழுகையை விட்டும் தடை செய்யப்பட்டவனாகிறான். ஆதாரம் - நூறுல் ஹகாயிக்

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் மஸ்னவி ஷரீபில் முழங்குவதைப் பாருங்கள்.

அவ்லியாக்கள் அல்லாஹ்வுக்கு உவப்பானவர்கள். அந்தரங்க பகிரங்க விஷயங்களை அறிந்தவர்கள். முத்தலக்கான அல்லாஹ்வுக்கு அவ்லியாக்கள் கண்ணாடியாவார்கள். அவுலியாக்கள் அல்லாஹ்வின் சொந்தமான கண்ணாடியாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வலியும் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கப்பல் என்று அறி!.இவர்களை நேசித்தால் நாசம், என்னும் வெள்ளத்தில் நின்றும் தப்பித்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வுக்கு பிரியமானவர்கள் அவ்லியாக்களுடைய சமூகத்தில் இருப்பார்களாக !

அவ்லியாக்களுடைய சமூகத்தில் நின்றும் விலகியிருப்பீர்களேயானால் உள்ளரங்கத்தில் அல்லாஹ்வை விட்டும் தான் விலகி இருக்கின்றீர்கள்.

சூரத் பாத்திஹாவின் வசனங்கள் - 7 வானம் - 7 பூமி - 7 கடல் - 7 தவாபுடைய சுற்று - 7 ஸபாமர்வா மத்தியில் ஸயீ செய்யும் நடை - 7 மினாவில் எறியும் கற்கள் - 7 வாரத்தில் நாட்கள் 7 நப்ஸின் வகைகள் - 7 குர்ஆனில் ஹாமீம் என்று துவங்கும் அத்தியாயங்கள் - 7

பள்ளிவாசல் நிர்வாகம்

தலைவரின் கீழ் இயங்கும் கமிட்டியின் பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட செயல்முறைக்குப் பள்ளிவாசல் நிர்வாகம் என்று பெயர்.

ஆனால், இறையச்சம் குறைந்து பொது நலசேவை உணர்வு மங்கி. சமுதாய மேம்பாடே தனி மனிதனின் மேம்பாடு என்ற சமுதாய உணர்வு மங்கி ஆதிக்க உணர்வு மேலோங்கிப் போய் விட்ட காலகட்டமாக இருப்பதால் தனி ஒருவரிடம் அப்படி பள்ளிவாசல் நிர்வாகத்தை ஒப்படைப்பதென்பது அவ்வாராக நல்லதல்ல. ஆகவே பள்ளிவாசல் நிர்வாகம் ஒரு குழுவினரின் பொறுப்பிலே ஒப்படைப்பதுதான் சாலவும் சிறந்தது.

நிர்வாகிகளின் தகுதி !

* பள்ளிவாசல் நிர்வாகம் செய்யத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரின் தகுதி என்ன ?
* பகிங்கரமாக ஷிர்க்கு பித்அத்து போன்ற காரியங்களில் ஈடுபடாதவராகவும்
* சம்பூரணமாக ஈமான் உடையவராகவும்
* ஐங்காலத் தொழுகைகளை பேணுதலுடன் நிறைவேற்றுபவராகவும்
* ஜக்காத் கொடுக்குமளவு வசதி வாய்ப்புகள் இருப்பதுடன், ஜகாத் கொடுத்து வரக் கூடியவராகவும்
* விறுப்பு, வெறுப்பு உணர்வுகளுக்க ஆட்படாமல் இருப்பதுடன் அல்லாஹ்விற்காக எதையும் செய்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்விற்காக எதையும் விடுத்தும் நடக்கவல்ல இயல்புடையவராகவும்

* மார்க்க ஞானம் அறிந்தவராக இருப்பதும், ஹாஜியாக இருப்பதும் திருமணமானவராக இருப்பதும்
* நாற்பது வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதும்
* உலகியல் ஞானமுடையவராக இருப்பதும்
* வியாபாரம், விவசாயம் போன்ற உலகியல் காரியங்களை விட மார்க்க முக்கியத்துவம் கொடுப்பவராக இருப்பதும்
* விருந்தோம்பலில் விருப்பமுடையவராக இருப்பதும்
* சொல் செல்வாக்கு, ஆள் செல்வாக்கு உடையவராக இருப்பதும்
* ஆடம்பரமற்ற ஆனால் சுத்தமான, அழகான ஆடை அணிபவராக இருப்பதும்
* கருணை மரியாதை போன்ற நற்பண்புகளில் உயர்ந்தவராகவும்

ஆக இத்தியாதி குணப்பண்புகளை உடையவராக இருப்பதும் விரும்பத்தக்க தகுதியாகும்.

அது போன்றே பொருளாளராக, செயலாளராக, கமிட்டி உறுப்பினர்களாக இருப்பவர்களும் மேற் குறிப்பிட்ட அனைத்து தகுதிகளில் இல்லாவிட்டாலும் ஐந்துக்கு இரண்டு பங்கு என்ற நிலையாவது இருக்க வேண்டும்.

"அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து தொழுகையும் கடைப்பிடித்து ஜகாத்தும் கொடுத்து வருவதுடன் அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கிறார்களோ அவர்கள் தாம் அல்லாஹ்வுடைய பள்ளிகளைப் பரிபாலனம் செய்யக் கூடிய (தகுதி பெற்ற) வர்கள். இத்தகையோர் தாம் நேரான வழியில் இருப்பதாக நம்பத்தக்கவர்கள்." குர்ஆன் - 9, 17, 18

பிரார்த்தனை !

யா அல்லாஹ் ! இச்சிறு நூலை நீ ஏற்று இது மக்களுக்கு நல்வழி காட்டியாக அமைத்து சன்மார்க்கலையில் அறிவு வளரப் பெற்று நற்றவ நல் அமல்கள் செய்த உன்னருள்வாயல் புகுந்த நல்லவர்களுடன் நீ எங்களை இணைத்து ஈருலகிலும் உனது அருளை எங்கள் மீது சரமாரி பொழிவாயாக ! ஆமீன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஹிஜ்ரி - 1417 - ரமழான் - பிறை - 23 - (02. 02. 1997) ல்
காலஞ்சென்ற எனது அன்பின் சகோதரர் அல் - ஹாஜ்
**A. L. M.** நிஸாம் அவர்களுக்கு
இந்நூலின் நன்மையை சமர்ப்பிக்கின்றேன்.
(ஆ - ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"WELLIKKILAMAI NAL" - Tamil Feb 1997 Free Issue

" இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜி ஊன் "

1995 - 05 - 19 ல் காலஞ் சென்ற
ஹபீப் முஹம்மது முஹம்மது சாலி (ஜெமால்தீன்)
(கூட்டுறவுப் பரிசோதகர்)

1986 - 04 - 23 ல் காலஞ் சென்ற
நூர்முஹம்மது மொஹிதீன் அப்துல் காதர்
44 கொட்டுவேகெதர ரோட்,
கூம்பியாங்கொடை - மாத்தளை

1986 - 11 - 24 ல் காலஞ் சென்ற
காதர் சாஹிப் ஹஸன் பாத்திமா
வரகாமுர - மாத்தளை
ஆகியோரின் பெயரால் இந்நூல் அன்பளிப்புச்
செய்யப்பட்டது.
" அல்லாஹுத்தஆலா நாயகம் ஸல்லல்லாஹு
அலைஹிவஸல்லம் அவர்களின் பொருட்டினால்
அன்னார்களது பிழையனைத்தும் பொறுத்து பிர்தவ்ஸ் எனும்
சுவனலோகத்தைக் கொடுத்தருருள்வானாக ! ஆமீன் "
வஸ்ஸலாம்
இவ்வண்ணம்
அன்புள்ள
முஹியத்தீன் அப்துல் காதர் முஹம்மது நிஸார்
இஸ்ஸத் விலா, ரிவசைட் ரோட், கழுகமுவ - கெலிஓயா.

WITH BEST COMPLIMENTS FROM :

AL - HAJ - U. ABDUR RAHMAN LEBBE - J. P.
KURUGAMA - ESTATES
YAHALATENNE

M. J. M. ANSAR
No. 189, MEEWALADENIYA
HANDESSA

Published by : AL - HAJ A. L. M. HAAMEEM 157, Kalugamuwa, Gelioya.
Printed by : Nisshin Offset Printers - Gelioya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org